# இறையியல் களஞ்சியம்

CHRISTIAN THEOLOGICAL SEMINARY

இயேசு கிறிஸ்து உலகின் ஒளி

1823 SRI LANKA 1983

## நத்தார் சிறப்பிதழ்

மலர் : 11 டிசம்பர் 2005 இதழ் : 26

பதிப்பாசிரியர் : அருட்தந்தை டீ.ஆர்.அம்பலவாணர்

துணை ஆசிரியர் : அருட்திரு வி.பத்மதயாளன்

நிர்வாக ஆசிரியர் : அருட்திரு.ரி.தேவநேசன்

ஆசிரியர் குழு : அருட்கலாநிதி. தியான்சந்த் கார்

அருட்திரு.பென்சமின் ஜெயராஜா

அருட்திரு.ஈனோக் பூ.புனிதராஜா

ஆலோசகர் : பேராயர் கலாநிதி.எஸ்.ஜெபநேசன்

மாணவர்குழு : சகோ.எஸ்.ஜோன் புவியரசன்

சகோ.எம்.ஜெயானந்தராஜா

சகோ.எம்.லூக் ஜோன்

அச்சுப்பதிப்பு : CoC Graphics Inuvil.

வெளியீடு : இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரி

மருதனார்மடம் - சுன்னாகம்.

(தனிப்பட்ட விநியோகத்துக்கு மட்டும்)

**Pubication** : Christian Theological Seminary of Srilanka,

Maruthanarmadam – Chunnakam

(For Private circulation only)

# இறையியல் களஞ்சியம்

காலாண்டு வெளியீடு

## IRAI – IYALKALANJIAM
## TAMIL THEOLOGICAL JOURNAL

CHRISTIAN THEOLOGICAL SEMINARY

இயேசு கிறிஸ்து உலகின் ஒளி

1823 SRI LANKA 1983

மலர் - 11 டிசம்பர் - 2005 இதழ் - 26

இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரி,
மருதனார்மடம் சுன்னாகம்,
இலங்கை.

# பொருளடக்கம்


1. இறைவணக்கம்.
2. ஆசிரியர் பார்வையில்.
3. தந்தை செல்வாவின் பக்தி நெறி.
4. தரித்திரனாகுதலின் தேவை.
5. வெறுமையாகுதலின் மானிட அவதாரம்.
6. இந்திய மரபுக் கண்ணோட்டத்தில்..........
7. இயேசுவின் வெறுமையாகுதல்..........
8. இயேசுவின் தரித்திரம்.
9. இயேசுவின் தரித்திரமும் எங்கள்..........
10. ஏழைகளோடு நம்மை ஒன்றுபடுத்துவோம்.......
11. கிறிஸ்து பிறப்பின் தனிச் சிறப்பு.
12. அவரின் ஏழ்மையால் நாம் பெற்ற செல்வம்
13. குறுக்கெழுத்துப் போட்டி----------

# இறை வணக்கம்

1. ஒளியென உலகில் உதித்தவர் இயேசு
ஒளியென விளங்க அழைக்கிறார் நம்மை
ஓடியே வருவோம் ஒருமித்தே உழைப்போம்
ஓரிறை அவரை உண்மையாய் தொடர்வோம்

2. இருளதின் பிடியின் இருக்கின்ற உலகை
அருளவர் துணையால் விடுவித்து காப்போம்
மருளத்தை நீக்கும் மன்னவர் அவரின்
கருணையின் நிழலில் கடமைகள் புரிவோம்

3. வறுமையாம் இருளில் வாழ்ந்திடும் மக்கள்
சிறுமைகள் நீங்கி சீர்பட உழைப்போம்
தனிமையை தூரத்தி நட்பினை அளிப்போம்
கனிவுடன் பிறர்க்கு கடன்பணி புரிவோம்

4. நாட்டினில் நடப்புகள் இருளடைந்திருக்க
போட்டிகள் மிகுந்து பிரிவனை மிஞ்சிட
நாட்டமுடன் நாம் நாயகன் இயேசு
காட்டிடும் பாதையில் களிப்புடன் செல்வோம்

தங்கராசா. எம். தோமஸ்
- அரசடி, மதுரை

# ஆசிரியர் பார்வையில்.........!

கிறிஸ்து பெருமான் பிறந்த பெருமங்கல நத்தார் திருவிழாவை – கடந்த பல நூற்றாண்டுகளாக நாம் தொடர்ந்து மேலோட்டமாகவே கொண்டாடி வருகிறோம். இது தவறென இன்றைய விவிலிய அறிஞர்கள் தக்க ஆதாரங்களுடன் கூறுகின்றனர். முதன் மூன்று நற்செய்தி நூல்களில் இயேசுபிரானின் பிறப்பைப் பற்றி மேலோட்டமாகவே கூறப்பட்டுள்ளது. அதனால், நத்தார் விழாவிற்கு இதுவே, அடிப்படைக் கருத்தாக அமைந்து விட்டது.

ஆனால், யோவான் நற்செய்தியாளரும் பவுலடியாரும் தான், இயேசுநாதரின் பிறப்பைப் பற்றி ஆழ்ந்த கருத்தினைத் தந்துள்ளார். "தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு, அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு – கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்............. தம் மகன் வழியாக அதை மீட்கவே கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார். (யோ 3:16-17) மேலும், பவுலடியார் – "அவர் செல்வராயிருந்தும் உங்களுக்காக ஏழையானார் (தரித்திரரானார்) அவருடைய ஏழ்மையினால் நீங்கள் செல்வராகுமாறு இவ்வாறு செய்தார்" (2 கொரி 8:9)

எனவே இவ்வாண்டில் நாம் கொண்டாடப் போகும் நத்தார் திருவிழா நாட்களில் நாம் முக்கியமாக நினைவுகூற வேண்டியது – நம்மைச் செல்வராக்கத் தம்மையே வெறுமையாக்கிய ஆண்டவர் (பிலிப்பி 2:1-9) அடிமையின் வடிவையேற்றுத் தரித்திரரானார் என்பதே. இது நத்தார் விழாவின் மையப் பொருள். இங்கு தரித்திரம் ஏழ்மை என்ற சொல் - "கொடிய வறுமை" **Abject poverty extremely and wretched poverty** என்று பொருள்படும். அதாவது அவர் செல்வராயிருந்தும் எங்களுக்காக ஏழையானார் - அவருடைய ஏழ்மையினால் நாங்கள் செல்வராகுமாறு. எதற்காக இவ்வாறு

செய்தார்? அவரைப் போல். நாங்கள் ஏழை மக்களின் நலனுக்காக, இவ்விழாக் காலங்களில் நற்பணியாற்ற முன்வர வேண்டும் என்பதற்காகவே என அறிக.

இந்தச் செல்வம் இவ்வுலகு சார்ந்த செல்வமல்ல - இது அருட்செல்வம் - பன்னலஞ் செறிந்த – பல்வளம் பொதிந்த பண்பு வளமிக்க வாழ்வு வளம் - இறைவனின் அருளால், எல்லையில்லாக் கருணை – பரிவு -இரக்கம் போன்ற அருட்செல்வம் நமக்கு வழங்கப்படும்

இவற்றை ஏழைகளோடு பகிர்ந்து அவர்களை மகிழ்விக்க வேண்டும் என்பதே எம்பெருமானின் திருவுளம் - நமது ஆண்டவர் இதற்காகவே தம்மை வெறுமையாக்கி – அடிமையின் வடிவை ஏற்று மனிதரைப் போலானார். இவ்வுலக மக்களைப் பாவப்பிடியிலிருந்து மீட்க மேசியாவாக வந்த கிறிஸ்துபிரான் - அங்கிருந்த சத்திரத்தில் இடமளிக்காதபடியால் மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார். – மேலும், இறைபணி ஆற்றும் போது, “நரிகளுக்குப் பதுங்கு குழிகளும், வானத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனித குமாரனுக்கு (தமக்கு) தலைசாய்க்கக் கூட இடமில்லை” (லூக் 9:58) என்று தமது கொடிய ஏழ்மை நிலையை விவரித்ததைக் காண்க.

கிறிஸ்துபிரான் இவ்வுலகிற்கு வந்ததுதான் இறைவனைப் போல் இருக்கிறேன் என்று கூறவல்ல. இறையியல் அறிஞர் **D.M.Baillie** “கடவுள், இயேசு கிறிஸ்துவில் தம்மை எங்களுக்கு வெளிப்படுத்தினார்.” என்று கூறுகிறார். அதாவது, மனிதனைச் சந்திக்க உறவு கொள்ள ஏழைக்கோலமெடுத்த இயேசுநாதராக வந்தார் என்று விளக்குகின்றார்.

எனவே, இறைவனின் இயேசுபிரானின் வழியாக நமக்கு வழங்கிய அருட்செல்வத்தை - இந்த நத்தார் விழாக் காலத்தில், ஏழைகள் - அநாதைகள், திக்கற்ற முதியோர்

விதவைகள் ஆகியோருக்கு அள்ளி வழங்கி, அவர்களை மகிழ்விப்பது நமது தலையாக கடமை. இயேசுபிரான் நேற்றும் இன்றும் என்றும் மாறாதிருக்கிறார் - தம்பக்கத்தில் உயிருடன் இருக்கிறார் – தம்மை ஒருபோதும் கைவிடார்' – என்ற உண்மையை உணர்ந்து வாழ உதவுவது நம் கடமை.

'காலத்திற்கு ஏற்ற முறையில் சமயக் கருத்துக்களை –கிறிஸ்துபிரானின் திருவருகையின் மையப்பொருளை, வழங்கவேண்டும். அப்பொழுது தான் நமது சமயம் இன்றைய அறிவியல் யுகத்தில் - புறக்கணிக்கப்படாமல், 'ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி' அனைவர்க்கும் இரட்சிப்பின் வழிகாட்டும் சமயமாக மிளிரும். குழந்தை இயேசுவின் திருப்பிரசன்னம் அனைவரையும் அன்புடன் அணைக்கும்.

இன்று அலகை (சாத்தான்) ஆண்டவரின் உடலாம் திருச்சபையைச் சீரழித்து, பிளவுபடுத்தி வருவதை நாம் காண்கிறோம். "The Church that lives to itself will die by itself" என்றார் ஓர் அறிஞர். இதனைச் சபைக் குருமார் நன்கு அறிந்துணரவேண்டும். இருள் சூழ்ந்த இன்றைய சூழலில் தூய ஆவியார் வழியாக இறைவன் நமக்குக் கூறுவதைக் கேட்டு, விழிப்புணர்ச்சி அடையவேண்டும். இன்றைய குழம்பிய நிலையில், சபையின் வளர்ச்சியில் ஈடுபட்டிருப்போர் –"You must aim to form a United National Church of Srilanka" என்று தூய ஆவியார் கூறுவதற்குச் செவிமடுக்க வேண்டும்.

"அன்பே வாழ்வின் அடிப்படைச் சக்தியாக, என்றாவது ஒருநாள் நாம் ஏற்று ஆகவேண்டும். - இவ்வியல்பான வழி முறையே மானிடரை உயர் பரிமாணத்திற்கு வழிநடத்தும்" என்றார் அறிஞர் தெயார்த்தே ஷார்தன். இந்த அன்பே வாழ்க்கையின் அடிப்படைச் சக்தியாக நமது சபைக் குருமார் ஏற்றுத் - தமக்குள் இருக்கும் பகைமையை நீக்கி - இமைப் பொழுதுதும் சோராது அல்லும் பகலும்

ஒல்லும் வகையெல்லாம் - நமது திருஅவையின் (திருச்சபை) ஒன்றிப்புக்காக குழந்தை இயேசு (இயேசுபாலகன்) நம்மை ஊக்கப்படுத்தி வழிநடத்த வேண்டுமென இறைவனை இறைஞ்சுவோமாக.

"நான் ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு,
அதுவும் நிறைவாய்ப் பெறும்பொருட்டு வந்துள்ளேன்"
(யோவா 10:10)

**உங்கள் அனைவர்க்கும் எங்கள் உளங்கனிந்த நத்தார் நவவருட நல்வாழ்த்துக்கள்.**

பதிப்பாசிரியர். D.R.A

## உழைப்பின்றி வாழ்வில்லை !

*உழைப்பின் வாயில் கடந்தல்லாமல் எவரும் செல்வமோ வளமோ, கலையோ, அறிவோ பெறமுடியாது என்பது திண்ணம் - எனவே உழைப்பு முழுப்பயன் தரவேண்டுமானால் நாம் திட்டமிட்டு உழைக்கவேண்டும். இதனை உணர்த்தும் பின்வரும் பாடலைக் கவனியுங்கள்.*

*"சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்*
*வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் நித்தம்*
*நடையும் நடைப்பழக்கம் நட்புந் தயையும்*
*கொடையும் பிறவிக் குணம்"*

*இந்தப் பாடல் இங்கே நிறைவில் கொள்ளத்தக்கது – சிந்தியுங்கள் செயல்படுங்கள்;;*

# தந்தை செல்வாவின் பக்திநெறி

பேராயர் S.ஜெபநேசன்

திரு S.J.V செல்வநாயகம் 1898ம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் திகதி மலேயாவில் உள்ள ஈப்போ நகரில் பிறந்தவர். தந்தையாரின் பெயர் வேலுப்பிள்ளை 1வது உலகமாகயுத்தத்தின் போது மலேயாவில் வாழ்ந்த பலர் கல்விக்காக தமது குடும்பத்தினரை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவிட்டு தொடர்ந்து மலேயாவில் பணியாற்றினார்கள். அப்படிப்பட்டவர்களில் ஒருவர் தான் திரு வேலுப்பிள்ளை. தமது 3புதல்வர்களையும் மனைவி ஹரியட் அன்னம்மாவையும் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவிட்டு தொடர்ந்து மலேயாவில் பணியாற்றி வந்தார். திரு. வேலுப்பிள்ளை அவர்கள் சிறந்த கிறிஸ்தவராக வாழ்ந்தார். உலகமகாயுத்தத்தின் போது கிறிஸ்தவமதகுருமாரை மலேயாவில் காண்பது அரிது. திரு வேலுப்பிள்ளை அவர்கள் தாம் இறந்தால் கிறிஸ்தவமுறைப்படி தமக்கு நல்லடக்க ஆராதனை நடைபெற வேண்டும் என்று விரும்பினார். அவர் இறந்த பொழுது ஓர் இந்து நண்பனே அருகாமையில் இருந்தார்.திரு. வேலுப்பிள்ளை விருப்பப்படி அவருடைய பூதஉடலை அருகில் இருந்த கிறிஸ்தவ தேவாலயத்திற்கு எடுத்துச்சென்றார். பூதவுடல் இருந்த பேளையை சுற்றி மெழுகுதிரிகளை கொழுத்தி வைத்தார். தேவாலயத்தில் இருந்த ஆராதனை புத்தகங்களை எடுத்து அடக்கஆராதனை ஜெபங்களை வாசித்தார். தாம் கற்றிருந்த கிறிஸ்தவ பாடல்களைப் பாடினார். மீண்டும் ஜெபங்களை வாசித்து பூதவுடலை நல்லடக்கம் செய்தார். இவ்வாறு அவருடையநல்லடக்கம் நடைபெற்றது.

திருமதி ஹரியட் அன்னம்மாவும் பிள்ளைகளும் தெல்லிப்பழையில் வந்து குடியேறினார்கள். தெல்லிப்பழை அமெரிக்கன் மிசன் தேவாலயத்தில் அவர்கள் கிராம வழிபாடு செய்தார்கள். அப்பொழுது தெல்லிப்பழையில் வண C.D வேலுப்பிள்ளை அவர்கள் மதகுருவாக இருந்தார்.

## பரி.யோவான் கல்லூரியில் சிறந்த பயிற்சி

தெல்லிப்பழையில் அமெரிக்கமிசன் பாடசாலையில் படிப்பை முடித்த பின்னர் திரு.செல்வநாயகம் அவர்களும் 2 சகோதரர்களும் யாழ்ப்பாணம் பரி.யோவான் கல்லூரியில் படிப்பை தொடர்ந்தார்கள். இங்கு தான் திரு.செல்வநாயகம் அவர்களின் பக்தி, மனவுறிதி, நேர்மை, துணிவு என்பனவற்றிக்கு அத்திவாரம் இடப்பட்டது.

கல்லூரி அதிபராக வண.ஜேக்கப் தொம்சன் என்ற மதகுரு இருந்தார்.அவருடன் அறிவும், பக்தியும் நல்லொழுக்கமும் கொண்ட ஆசிரியர்கள் பலரும் இருந்தனர். அக்காலத்தில் பரி.யோவான் கல்லூரியில் கற்ற பலர் சிறந்த கிறிஸ்தவ பக்தர்களாகவும் துணிச்சல் மிக்க அரசியல்வாதிகளாகவும் பிற்காலத்தில் திகழ்ந்தனர். வண.J.T அருளானந்தம் பேராயர் சபாபதி குலேந்திரன், வண. J.A.R.நவரத்தினம், டாக்டர் E.M.V நாகநாதன், திரு சாம் சபாபதி, பார் குமாரகுலசிங்கி சகோதர்கள் இக்காலத்தில் அங்கு கற்று அரங்கேறியவர்கள். இப்படிப்பட்ட சிறந்தவர்களை அக்காலகட்டத்தில் வேறு எந்த கல்லூரியாவது உருவாக்கவில்லை என்று துணிந்து கூறலாம். இதன் பின்னர் திரு.செல்வநாயகம் அவர்கள் கொழும்புக்கு சென்று தமது படிப்பை தொடர்ந்தார். ஆசிரியனாகி பின்னர் வழக்கறிஞரானார்.

## திருமணம்

திரு.செல்வநாயகம் அவர்கள் தெல்லிப்பழையைச் சேர்ந்த (BARR) மணியத்தின் மகளான எமிலி கிரேஸ் அம்மையாரை திருமணம் செய்து கொண்டார். BARR குமாரகுலசிங்க குடும்பத்தினர் தெல்லிப்பழையில் பரம்பரை பரம்பரையாக மணியகாரர்களாக இருந்தவர்கள் அதே சமயம் சிறந்த கிறிஸ்தவ பக்தர்களாவும் விளங்கினார்கள்.

## முதல் தோல்வி

1947ம் ஆண்டு தமிழ் காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்றார். ஆனால் அடுத்த வருடம் இலங்கை தமிழரசுக் காட்சியை ஆரம்பித்தார். 1952ஆம் ஆண்டு தமிழ் பிரதேசங்களில் தமிழ் அரசு கட்சிக்கும், தமிழ் காங்கிரஸ்சுக்கும் கடும்போட்டி நிலவியது. திரு.செல்வநாயகத்தை எதிர்த்து போட்டியிட்டவர் திரு.சு.நடேசபிள்ளை. இவர் சேர் பொன் இராமநாதன் மகள் சுந்தரியை திருமணம் செய்தவர். "நடேசன் நல்லவன் " என்று பிரச்சாரம் நடைபெற்றது. திரு செல்வநாயகத்திற்கு அவருடைய மதம் தடையாக இருந்தது சமய உணர்வுகள் தூண்டப்பட்டபடியினால் திரு S.J.V. செல்வநாயகம் தோற கடிக்கப்பட்டார்.

## நற்செய்தியும் அரசியலும் ஒன்றே

திரு.செல்வநாயகம் அவர்கள் இந்த தோல்வியைக் கண்டு துவண்டு போய்விடவில்லை அரசியல் என்பது நற்செய்திப்பணி போன்றது என்பது இவருடைய கருத்து "அரசியயல்வாதியின் பணி ஒரு வழக்கறிஞ்ஞனின் பணி போன்றது என்பர் சிலர். ஆனால் உண்மையில் அது ஒரு நற்செய்தியாளரின் பணி" நற்செய்தி யாளனிடம் ஒரு செய்தி இருக்கின்றது. அதனை சம்பூரணமாக நம்பி அதனைப் பரப்புவதில் முழுமூச்சாக ஈடுபடுகின்றான். வழக்கு அறிஞனோ ஒரு குறிப்பிட்ட பிரச்சனையில் வெற்றிபெறுவதற்காக வாதங்களை முன் வைக்கின்றான். ஒரு நற்யெ்தியாளனின் மனஉறுதியுடனும் திடசங்கற்பத்துடனும் திரு.செல்வநாயகம் அவர்கள் சமஷ்டி கொள்கையை நாட்டிலும் வீட்டிலும் பரப்பி வந்தார். 1956ம் ஆண்டு தேர்தலுக்கு முன்னர் ஐக்கிய தேசியக்கட்சியும் சிறிலங்காசுதந்திரகக் கட்சியும் ஒருவரை ஒருவர் விஞ்சுமளவுக்கு வகுப்புவாத விஷத்தைக்கக்கினார்கள். அப்பொழுதுதான் திரு. செல்வநாயகம் அவர்களுடைய தீர்க்கதரிசனத்தையும் அரசியல் ஞானத்தையும் தமிழ் மக்கள் சம்பூரணமாக உணர்ந்தார்கள். திரு செல்வநாயகத்தின் மீது அவர்களுக்கு அளவு கடந்த, மதிப்பும், அபிமானமும் ஏற்ப்பட்டன.

உள்ளத்தார் பொயாதொழுகின் உலகத்தார்
உள்ளத்தில் எல்லாம் உளன். என்று வள்ளுவரும்

"Let modes of faith zealous bigots fight. He cannot be wrong whose path is in the right" என்று அலெக்சாண்டர் போப் கூறியதும் திரு. செல்வநாயகம் வரலாற்றில் நிரூபிக்கப்பட்டது. தமிழ் மக்கள் திரு செல்வநாயகத்திடம் இரண்டு விஷயங்களைக் கண்டார்கள்.

1. உள்ளத்தால் பொய்யாத கிறிஸ்தவன்.
2. உள்ளத்தால் பொய்யாத தமிழர் தலைவன்.

இந்த இரண்டு விஷயங்களை அவர்கள் உணர்ந்த பின்னர் அவர்கள் மனம் மாறவே இல்லை. 1977ம் ஆண்டு அவர் இறக்கும் வரை தமிழ் மக்கள் அவரை தமது முடிசூடாமன்னராக வைத்திருந்தார்கள்.

தமிழ் தந்த பெருமையை தந்தை செல்வா நன்கு உணர்ந்து இருந்தார் 1970இல் ஒரு பிரபல்யமான சிங்களபௌத்த குரு இரட்ணசாரா என்பவர் கிறிஸ்தவனாகிய செல்வநாயத்திற்கு, இந்துக்களே பெரும்பான்மையாகக் கொண்ட தமிழ் மக்களுக்கு தலமை தாங்க தகுதியில்லை என்று குறிப்பிட்டார். அதற்கு திரு செல்வநாயகம் அவர்கள் இந்துசமயத்தவர் தமக்கு தலமைதாங்க எள்ளையோ வேறு கிறிஸ்தவர்களையோ மதம் மாறும்படி கேட்டுக்கொள்ளவில்லை. இது அவர்களுடைய பெருந்தன்மை என்றார். ஏனெனில் இக்காலக்கட்டத்தில் பல சிங்கள கிறிஸ்தவ அரசியல் வாதிகள் அரசியல் இலாபம் நோக்கி பௌத்தர்களாகிக் கொண்டனர். யாழ்ப்பாணத்திலும் கிறிஸ்தவ அரசியல்வாதிகள் இந்துக்கள் ஆதரவை பெறும் முகமாக மதம்மாறினர் ஆனால் அவர்கள் தேர்தலில் கட்டுப் பணத்தையே இழந்தார்கள்.

தமிழரசுக்கட்சிக் கூட்டங்கள் பெரும்பாலும் சைவக் கோயில் சுற்றுபிரகாரங்களிலே நடைபெற்றன. கூட்டம் முடிந்த பின்னர் ஐயர், விபூதி வழங்குவார். சில கிறிஸ்தவர் மரியாதைக்காக விபூதியை பெற்றுக் கொள்ளார்கள், தரிக்கமாட்டார்கள், செல்வா அவர்களோ விபூதியை கொண்டுவரும் ஐயரிடம், "நான் வேதக்காரன்" என்று கூறிவிடுவார். ஐயர் வீபூதியைக் கொடுக்காமலே போய்விடுவார். எந்தவித்திலும் தான் கிறீஸ்தவன் என்பதை அவர் மறைக்க

விரும்பவில்லை இவருடைய சமய நேர்மை தமிழ் மக்களை பெரிதும் கவர்ந்தது.

1961ஆம் ஆண்டு திரு. செல்வநாயகம் அவர்கள் இங்கிலாந்தில் ஒரு சத்திர சிகிச்சை செய்து முடித்து விட்டு புதுப் பலத்துடன் நாடு திரும்பினார். அவரால் தமது கைகளினாலே இப்பொழுது எழுத முடிந்தது. முதலாவது கடித்தை பேராயர் சபாபதி குலேந்திரனுக்கு எழுதினார். இதன் முன்னர் கொழும்பில் உள்ள திரு. செல்வநாயகம் வீட்டில் இறைவனுக்கு நன்றி செலுத்தும் வழிபாடு பேராயர் குலேந்திரன் தலைமையில் நடைபெற்றது. அப்பொழுது திரு. செல்வநாயகம் கடவுளின் அருளை நினைந்து மனதுருகி தாரையாகக் கண்ணீர் வடித்தார்.

1970ம் ஆண்டு மே மாதம் 14ம் திகதி வட்டுக்கோட்டை தீர்மானத்தை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஏகமனதாக நிறைவேற்றினர். சுதந்திரமான சமதர்மம் கொண்ட தமிழ் ஈழத்தை உருவாக்குவதற்காக உழைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

சில கிறீஸ்தவர்கள் தனி நாடு கிடைத்தால் இந்துக்கள் கிறீஸ்தவர்களை நசுக்குவார்களே என்று கேட்டனர் அதற்கு திரு. செல்வநாயகம் அப்படி நடக்கலாம் ஆனால் இப்பொழுது பிரச்சனை அதுவல்ல ! அழிந்து போகின்ற தமிழ் இனத்தை காப்பாற்றுவதுதான் நமது வேலையாக இருக்கவேண்டும் ஆற்றில் மூழ்கிறான் ஒருவன் அவனை காப்பாற்றப் போய் நான் அமிழ்ந்துவிட்டால் எனது குடும்பம் என்னாவது என்று சிந்திப்பது போன்றது இத்தகைய நிலைப்பாடு என்றார்.

திரு. செல்வநாயகம் அவர்கள் இறுதிவரை கடவுள் மேல் நம்பிக்கை உடையவராகவே இருந்தார். கடவுள் பக்தியே எனது அரசியல் நடவடிக்கைகளுக்கு காரணம் என்றார். அண்ணல் காந்தி, திரு. செல்வநாயகம் அவர்கள் அரசியல் நடவடிக்கைகளை இறைவன் தமக்கு கொடுத்த பணியகவே கருத்தினாா.

தனி நாடு எப்படிப் பெறப்போகிறீர்கள் என்று கேட்டபொழுது திரு. செல்வநாயகம் அவர்கள் விசுவாசக் கண்ணால் காண்கிறோம் என்றே விடையளித்தார்.

# தரித்திரனாகுதலின் தேவை

சமயங்கள் மானிட வாழ்வை மேம்படுத்த உதவுகின்றது. மானிட வாழ்வில் ஏற்படும் வினாக்களுக்கு விடையளிப்பதும், ஏற்படும் சவால்களுக்கு விளக்கத்தை அளிப்பதும் இந்த சமயங்களேயாகும். எல்லா சமயங்களும் மானிடத்தை சீராக்க எழுகின்றன. இதனால் சமயக் கொள்கைகள் வேறாயினும் அதன் அடிப்படை உண்மையில் மாற்றம் காணப்படுவதில்லை. அவை பொதுவாக மானிடவாழ்வையும் இறைமையையும் இணைத்ததாக அமைகின்றது. மானிடவாழ்வில் இறைமை வெளிப்பட வேண்டுமென்பதையே கற்பிக்கின்றது.

திருமறையில் நற்செய்தி நூற்கள் இயேசுவின் வாழ்க்கை, வரலாற்றை எடுத்தியம்புகின்றது. பவுலின் மடல்களும் மற்றைய மடல்களும் இயேசுவின் வாழ்வில் காணப்பட்ட சிறந்த பண்பை எடுத்துக் காட்டுகின்றது. மீட்பு, விடுதலை, முன்குறித்தல், நீதிமானாக்கப்படுதல், விசுவாசம், கிருபை, மன்னிப்பு போன்ற செம்பொருட்களை விளக்குவதன் மூலம் பொது நிலையாளர்களுக்கும் கிறிஸ்துவின் தன்மையை எடுத்துக் காட்ட தயங்கவில்லை. கிரேக்க தத்துவங்களால் அதிகமாக கவரப்பட்ட விசுவாசிகளுக்கு பவுல் தனது வாழ்வின் அனுபவத்திற்கூடாக இயேசுவின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறார்.

குறிப்பாக கொரிந்தியருக்கு எழுதின இரண்டாவது மடலில் (8:9) கிருபை அல்லது அருள் குறித்து ஆழமான உண்மைகளை முன் வைக்கின்றார். கொரிந்து பட்டணத்தில் வாழ்ந்த மக்கள் பல்வேறு அரசியல், சமூக பொருளாதார நெருக்கடிகள் மத்தியில் வாழந்த பொழுது அவர்களுக்கு இயேசுவில் வெளிப்பட்ட உன்னதமான அளவற்ற வரையறையற்ற இரக்கம், பரிவு, என்பவற்றை ஒன்று திரட்ட கிருபை அல்லது அருள் என்ற சொற்றொடருக்கூடாக விளக்குகிறார் பவுல் அடிகளார்.

**சொல் விளக்கம்**

கிருபை அல்லது அருள் என்பதற்கு ஹரிஸ் என்ற கிரேக்க பதமும், ஹெஎன் அல்லது ஹெசட் (hesed) என்ற எபிரேய பதங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அருள் என்பதற்கு மன்னிப்பு, மீட்பு, மனந்திரும்புதல், மறுபிறப்பு, கடவுளின் அன்பு, இரக்கம், பரிவு என பல அர்த்தத்தில் வரும் பவுல் இப்பதத்தை தனது மடலின் ஆரம்பத்திலும், மடலின் முடிவிலும் பயன்படுத்தி வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இப்பதத்தை பயன்படுத்தியுள்ளார். அவற்றில் சில வருமாறு:

01. கிறிஸ்துவின் அருளினால் திருமுழுக்கின் மூலம் ஒன்றிணைக்கப்பட்ட விசுவாசிகளுக்குள் ஆணென்றும், பெண்ணென்றும் வேறுபாட்டை களைந்து விட்டு ஐக்கியப்பட்டு வாழ வேண்டுமென்று கலாத்திய திருச்சபையினருக்கு போதித்தார்.

02. அவரது சிறையிருப்பின் பிலிப்பியர் மடலை எழுதிய போது இறைவனின் அருளினால் ஆட்கொள்ளப்பட்ட நாள், எல்லா நிலைமையிலும் மனரம்மியமாக இருக்க கற்றுக் கொண்டேன். வாழ்ந்திருக்கவும் தெரியும், தாழ்ந்திருக்கவும் தெரியும். எவ்விடயத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாகயிருக்கவும், பட்டினியாயிருக்கவும், நிறைவுபடவும், குறைவுபடவும் கற்றுக்கொண்டேன் என்று கூறுகிறார்.

- என் கிருபை உனக்கு போதும் என்பதை 11 கொரி 12:9 குறிப்பிடும் போது பெலவீனத்தில் வெளிப்படும் பெலம் என்னை சாட்சியாக வாழ வைப்பதுமட்டுமல்ல, என் வாழ்வில் முழுமையை நிறைவை தருகிறது.

03. பிலேமோனுக்கு எழுதிய தனிப்பட்ட மடலில் அடிமையான ஓநேசிமுவை உன்உடன் ஊழியக்காரனாகவோ சகோதரனாகவோ ஏற்றுக்கொள் என்ற புதிய உறவு அறிமுகப்

படுத்துகிறார். இந்த மனநிலையை கிறிஸ்து அருளிய அருள்கொடைக்கூடாக பவுல் பெற்று வெளிப்படுத்துகிறார்.

கொரிந்திய மடலில் பவுல் கிருபையைக் பற்றி குறிப்பிட்டு இந்த கிருபை அவரை தரித்திரனாக்கியது என்று குறிப்பிடுகிறார். அவர் மேலும் கூறும் போது மானிட வாழ்வின் உயர்விற்காக மகிமைக்காக அவர் தன்னைத் தாழ்த்தினார். அவர் செல்வந்தராக இருந்தபோதும் (வேறு மொழி பெயர்ப்பில் ஐசுவரியலான்) நாம் அவருடைய தரித்திரத்தினாலே செல்வந்தராகும்படிக்கு எம்நிமித்தம் ஏழையானார். இதற்கு ஒப்பாக பாவமற்ற இயேசு நமக்காக பாவியானார் என கூறுகிறார்.

பவுல் பிலிப்பியர் மடலில் இயேசுவின் உன்னத நிலையை குறிப்பிட்டு எழுதும் போது அவர் கடவுளுடைய ரூபமாயிருந்தும், கடவுளுக்கு சமமாயிருப்பதை கொள்ளையாடிய பொருளாக எண்ணாமல் தம்மைதாமே தாழ்த்தி அடிமையின் ரூபமெடுத்து மனித சாயலானார் (பிலி 2:6,7) இயேசு கடவுளின் சாயலை வலிந்து ஏற்றுக் கொள்ளாமல் அல்லது அதை பறித்து கொள்ள விரும்பாமல் அடிமையின் நிலையை தானே விரும்பி ஏற்றார்.

இங்கு இரு வினைச் சொற்கள் அதாவது தரித்திரனானார், தன்னைத் தாழ்த்தினார், ஒரே நோக்கில் பயன்படுத்தப்பட்டுள்ளது. தரித்திரரானார் என்ற பதம் திருமறையில் குறிப்பாக பழைய ஏற்பாட்டு பகுதியில் வெவ்வேறு பகுதியில் வெவ்வேறு அர்த்தத்தில் வெளிப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் இந்த பதம் பொருளாதார சூழலில் பயன்படுத்தப்படுகின்றது (வேலி 25,35,47, . உபா 24:12) திருந்திய மொழி பெயர்ப்புகளில் ஏழை ஏழ்மை என்ற பதங்கள் பயன்படுத்தியுள்ளார்கள்.

அரசியல், சமூக பொருளாதாரத்தில் ஏற்படும் ஏழ்மை நிலையை உலகப் பிரகாரமான ஏழை என்றும், மனதில் உள்ளத்தில் அல்லது ஆத்மாவில் ஏற்படும் வெற்றிடம் அல்லது

குறைவை ஏழ்மையை ஆவிக்குரிய ஏழை என்றும் விசுவாசிகள் குறிப்பிடுவார்கள். சில இறையியல் அறிஞர்கள் (வேர்னர் கும்பல், நோர்மன் பெறின், R.M.பிறவுன்) போன்றோர் ஓரங்கட்டப்பட்டவர்கள் அல்லது ஓரத்திலிருப்போர் என்றும் அழைக்கின்றனர். ஏசாயா 61ம் அதிகாரத்தில் இந்த ஏழை என்பவர்கள் உடைந்த இருதயம் உள்ளவர்கள், சிறைபிடிக்கப்பட்டவர்கள், சிறையிலிடப்பட்டவர்கள், ஒலிமிடுபவர்கள் மற்றும் உள்ளத்தில் பாரமிருப்பவர்கள் என வர்ணிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்காக பயன்படுத்தப்படும் எபிரேய பதம் 'அனாவிம்' என்பதாகும். அனாவிம் என்பதை வளைக்கப்பட்டவர்கள் அல்லது கூனராக்கப்பட்டவர் என்று செபஸ்ரியன் கப்பன் என்பவர் Jesus and freedom என்ற நூலில் குறிப்பிடுகிறார். (P.83) கூனராக்கப்பட்டவர்கள் என்பவர்கள் சுரண்டப்பட்டவர்கள், பாரத்திற்குட்பட்டவர்களை ஆதரிக்க அல்லது அவர்களுக்காக வழக்காட ஒருவரும் இல்லாதவர்களை குறிக்கும். இவர்கள் பொருளாதாரத்தில் நசுக்கப்பட்டவர்களை மட்டுமல்ல அவமானப்படுத்துபவர்களையும், உரிமை மறுக்கப்பட்டவர்களையும் குறிக்கிறது.

இயேசுவும் ஏழைகள் என்று குறிப்பிடும் போது அவர்களை இரு நிலைகளில் காண்கிறார்.

01. கடவுளிடத்தில் மட்டும் நம்பிக்கை கொண்டோர்.

02. பொருளாதாரத்தினால் நசுக்கப்பட்ட வர்க்கத்தினர்

இந்த இருநிலையில் உள்ளவர்களை இயேசு தரித்திரர், ஏழைகள், ஒடுக்கப்பட்டோர் என்று இனம் கண்டுள்ளார். ஏழைகளுக்கும், ஏழைகளாக்கப்பட்டவருக்கும் விடுதலை, வாழ்வு கிடைப்பதற்காக இறைமகன் இயேசு விண்ணுலகை விட்டு மண்ணுலகம் வந்து தான் கண்ட சாதாரண மக்களின் வாழ்விற்கூடாக இந்த தாழ்மையான நிலையை தெரிந்து விரும்பி ஏற்றுக்கொண்டாரோ என்று எண்ணத் தூண்டுகிறது. ஏனெனில் அவரது வாழ்வில் அவர் சந்தித்த ஏழை விதவை தன்னிடத்திலுள்ள

தன் வாழ்விற்கு ஆதாரமாக இருந்த பணத்தை அப்படியே காணிக்கையாக போட்டதினால், பணத்தின் மதிப்பு வெளிப்பட்டது. தனது வாழ்வையே போட்டார் (Mk 12:43-44) மற்றவர்களோ செல்வப் பெருக்கத்திலிருந்து போட்டார்கள். இது இயேசுவின் வாழ்விற்கு சவாலாக அமைந்திருக்கலாம்.

மேலும் அவரது சீடர்கள் இயேசு அழைத்த போது எல்லாவற்றையும் விட்டுவிட்டு (பெற்றார், நண்பர்கள், சொத்துக்கள், தொழில்கள்) அவருக்கு பின் சென்றார்கள். அவரது வாழ்விற்கு வார்த்தைக்கு கீழ்ப்படிந்தார்கள் Mk 1:28)

மேலும் சீடர்களை அழைத்து அனுப்பிய போது வழிக்கு எதையாவது எடுத்து செல்ல வேண்டாம் உலகப்பொருள் எதையும் நாட வேண்டாம். அன்பு உபசரிப்பில் தங்கி வாழுங்கள் (Mk 6,7-13) இயேசு இவ்வாறு வாழும்படி சீடர்களுக்கு பணித்தது மட்டுமல்ல தனது வாழ்விலும் வாழ்ந்து காட்டினார். மற்றொரு சந்தர்ப்பங்களில் தாழ்மையான இடங்களை வாழ்வை ஏற்றுக்கொள்ள வேண்டும் (Mk 10:43-45) என்று வலியுறுத்தியவர் அதன் மகுடமாக 11 கொரி 8,9 வசனத்தை செல்வந்தராயினும் உங்கள் நிமித்தம் தரித்திரரானார்.


தனக்காக வாழாது பிறருக்காக வாழும் இந்த தியாக வாழ்விற்கு தாழ்மை என்னும் பண்பு அவசியம் என்பதை தனது வாழ்விற்கூடாகவும், போதனைகளுக்கூடாகவும் வெளிப்படுத்துகிறார். ஆகையால் தான் சீடர்களைப் பார்த்து "என்னைப் பின்பற்றுங்கள்" என்ற அறைகூவலை விட்டு புதிய மானிடத்தை உருவாக்க கட்டியெழுப்ப முனைகிறார்.

இவ்வாண்டு மீண்டும் கிறிஸ்துவின் மனுவுரு ஏற்ற நிகழ்வை கொண்டாட ஆயத்தமாகின்றோம். மனுவுரு ஏற்ற இயேசு மானிட வாழ்விற்கு ஒரு சவாலை முன்வைக்கிறார். அதாவது கிருபை அல்லது அருளினால் கடவுளின் சாயலில் நாம் படைக்கப்படுகிறோம் இப் படைப்பு ஒரு நாள் நடைபெறுவதில்லை.

மாறாக ஒவ்வொரு நாளும் நடைபெறுகின்ற ஒரு தொடர் நிகழ்ச்சியாகும். இத் தொடர் நிகழ்ச்சி எம்மை மானிட வாழ்விற்கு நேராக அழைக்கிறது. இயேசு விட்டுச் சென்ற மானிடம் தன்னைத் தாழ்த்தும், வெறுமையாக்கும் தரித்திரராக்கும் மானிடம்.

இந்த மானிடத்தை நாம் ஏற்கின்றோமா? ஏன் நாம் அதை ஏற்க மறுக்கின்றோம் என்றால் அது எமது உலக வாழ்விற்கு, சுதந்திர வாழ்விற்கு, தான் தோன்றித்தனமான எண்ணத்திற்கு அல்லது வாழ்விற்கு இடமளிக்காததால் அதை ஏற்க விரும்பாவிட்டாலும் கிறிஸ்தவ வாழ்வு அந்த உன்னத வாழ்விற்கு நேராக நம்மை அழைக்கிறது. எப்பொழுது மாறும் இந்த தரித்திரம், எப்பொழுது போகும் இந்த ஏழ்மை என்று கேள்வி கேட்காது, உலக பிரகாரமாக சிந்தியாது இயேசுவின் தரித்திரத்தை எமதாக்கிக் கொண்டு வாழ்வோம். இறை அருள் நம்முடன் இருந்து தரித்திரத்தை ஏற்று மானிட நிறைவுக்காக வாழ இந்த பிறப்பின் பண்டிகை நம்மை வழிநடத்தட்டும்.

வண. தே. தேவநேசன்



# வெறுமையாகுதலின் மானிட அவதாரம்

வருகையின் காலம், கிறிஸ்மஸ் விழா ஆண்டுதோறும் வந்து கொண்டேயிருக்கிறது. கிறிஸ்மஸ் விழா நமக்குத் தருகின்ற செய்தி கடவுளுடைய வார்த்தையானவர் ஒரு சிறு குழந்தையாகி மாட்டுக்கொட்டிலில் பிறந்தார். வார்த்தையானவர் மாம்சமானார் என்பதே, ஆலயங்கள் பல கட்டி, ஆடம்பர வழிபாடுகள் செய்து கிறிஸ்தவத்தை கிறிஸ்துவை ஒரு எல்லைக்குள் அடக்கி வைத்துள்ளோம், ஆனால் இப்பொழுது ஆடம்பரங்களே எஞ்சி நிற்கின்றன. கிறிஸ்தவம் எங்கே? கிறிஸ்து எங்கே? கிறிஸ்மஸ் ஓர் ஆடம்பரமான விழாவாக பாரம்பரிய விழாவாகி விட்டது. கிறிஸ்மஸ் விழாவின் மையத்திலிருப்பது ஓர் குழந்தை – மனுவுருவான கடவுள். கடவுள் மனுவுருவானார் அல்லது ஊனுடல் வடிவம் எடுத்தார் என்பது கிறிஸ்மஸின் மையச் செய்தி.

வரலாற்றில் - கடவுள், வரலாற்றில் செயல்படுகிற இறைவன் வரலாற்றை இயக்கும் இறைவன் என்ற இயல்பூக்க இறையியல் மூலமாக விளக்கப்பட்ட கடவுள், பழைய ஏற்பாட்டில் இருக்கிறவராகவே இருக்கிறேன், கடவுள் நம்மோடிருக்கிறார் மாரநாதா – கடவுள் வருகிறார் என்ற எபிரேய பின்னணியில் விளக்கப்பட்ட கடவுள் ஊன் நிலையில் வெளிப்பட்டார் என்பதை புதியஏற்பாடு விளக்கி நிற்கிறது. இதை தூய யோவான் தன் நற்செய்தி நூலில் தெளிவாகக் காட்டுகிறார்.

கடவுள் இறங்கி வந்தார், தன் நிலையிலிருந்து வேறொரு நிலைக்கு வந்தார் என்பது இறைவனின் உயர் நிலையையும், அதேயிடத்து மனிதனின் தாழ்ந்த நிலையையும் எடுத்துக் காட்டுகிறது. He humbled himself, He emptied himself தன்னைத் தாழ்த்தினார். தன்னை வெறுமையாக்கினார் என்பதில் இந்த உண்மை பொதிந்துள்ளது. இது எதற்காக? மனிதனை உயர்த்துவதற்காகவே இதை பரி.பவுலடியார் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார். “அவர் (கிறிஸ்து) கடவுளின் ரூபமாயிருந்தும்,

கடவுளுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளைப் பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷசாயலானார்" பிலி 2:6,7) (மோனகன் மொழிபெயர்ப்பு) ஊனுடல் எடுப்பில் காணப்பட்ட வெறுமையாக்கலை பவுலடியார் இவ்விதம் எடுத்துக் காட்டுகிறார்.

காலத்திற்கு முன் வாழ்ந்து கொண்டிருந்த கிறிஸ்து மனிதன் ஆவதற்காகத் தன்னையே வெறுமையாக்கினார். அதாவது கடவுளுக்கு சமனாயிருப்பதை பிடித்துச் கொண்டிராது, கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையைத் துறந்தார். இங்கு கிறிஸ்து தனது தெய்வீகத்தையோ, தந்தையோடு கொண்ட சிறப்பு உறவையோ இழந்து விட்டார் என்பது பொருளல்ல. இறை அடையாளங்களையும், தனிச்சிறப்புரிமையையும் துறந்தார் என்பதே.

கிறிஸ்துவுடைய வெறுமையாதலின் உச்சநிலையை அவரது கடைசி இரவு விருந்தின்போது (பஸ்கா விருந்து) காண்கிறோம். இங்கு அவர் ஒரு பணியாளனாக – அடிமைபோல் தன்னை மாற்றுகிறார். தனது அங்கியை கழற்றி வைத்துவிட்டு இழிவான துவாயை அரையிலே கட்டிச் கொள்கிறார். தெய்வீகமாகிய அங்கியை, பிதாவோடு சமனாகவிருந்த மகிமை நிலையை அவதாரத்தின்போது கழற்றி விட்டு வந்தவர். இப்போ தனது குருமுறைக்குரிய அங்கியையும் கழற்றிவிட்டு அடிமையின் வேடமாகி பணிவிடை செய்கிறார். தன் அடியாரின் கால்களைக் கழுவுகிறார். இறுதியில் எல்லாவற்றையும் இழந்தநிலையில் அடிக்கப்பட்டு, நொறுக்கப்பட்டு யாவராலும் கைவிடப்பட்ட நிலையில் சிலுவையிலே தொங்குகிறார். அவரது வெறுமையாக்குதலின் அல்லது தரித்திரராதலின் உச்ச நிலையை தாழ்மையின் உச்ச நிலையை இவ்விதம் காண்கிறோம். ஏசாயா தீர்க்கனின் கூற்று நிறைவேறுகிறது (ஏசாயா 53:1-7)

ஏன்? அவருடைய வெறுமையாதலினால் அல்லது தரித்திரத்தினால் நாம் ஐசுவரியவான்களாக்கப்படவே. 2கொரி 8:9 இல் "நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை

அறிந்தீர்களே அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும் படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே" எனக் பவுலடியார் கூறுகிறார். கிறிஸ்து தன்னைத் தானே முழுமையாக வெறுமையாக்கி தரித்திரரானதால் மனிதன் ஐசுவரியவானாக்கப்பட்டான், பிதாவோடு கொண்ட உறவில் உயர்நிலை அடைந்தான். மனிதகுமாரன் தேவகுமாரன் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டான். ஆகவே மனிதன் மதிப்பும், பெருமதியும் வாய்ந்தவனானான். நாம் இன்று சக மனிதரை எப்படி நோக்குகிறோம்? சக மனிதனை மனிதனாக மட்டுமல்லாது தேவசாயல் கொண்ட தேவகுமாரனாகச் கண்டு கொள்ள வேண்டும். எல்லா மனிதரையும் எவ்வித வேறுபாடுகளின்றி இவ்விதம் கண்டு ஏற்றுக் கொள்ள வேண்டும். இதுவே கிறிஸ்துவின் வெறுமையாகுதலின் மானிட அவதாரம் நமக்குத் தருகின்ற முதலாவது அழைப்பாகும்.

அடுத்து பவுலடியார் சொல்லும் வண்ணம் கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே நம்மில் இருக்க வேண்டும். பிலி 2:5 "கிறிஸ்து இயேசுவிலுள்ள சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது" கிறிஸ்து எங்கள் நிமித்தம் நாங்கள் ஐசுவரியவான்களாகும்படி அதாவது நாங்கள் வாழ்வு பெறும்படி, எங்கள் வாழ்வு மதிப்பும், பெறுமதியும் பெறும்படி தன்னையே வெறுமையாக்கி தரித்திரரானார். அவ்வண்ணமே மற்றவர்கள் வாழ்வு பெறும்படி, சகமனிதனின் வாழ்வு அர்த்தமும் மதிப்பும் பெறுமதியும் பெறும்படி தாம் நம்மையே வெறுமையாக்க வேண்டும். கிறிஸ்து பிதாவோடு சமனாகவிருத்தல் என்ற மகிமைக்குரிய தெய்வீக ஆடையைக் களைந்து போட்டு மானிடரானார். குரு முறைக்குரிய ஆடையை களைந்து போட்டு பணியாளனாக தன்னை தாழ்த்தினார். அவ்வண்ணமே நாமும் நம்முடையதென மேன்மை பாராட்டும் பட்டம், பதவி, பணம், செல்வாக்கு, நான் - என்னுடைய நலன் வாழ்வு இவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்கின்ற அவா ஆகிய மேலாடைகளைக் களைந்து போட்டு உள்ளங்களை வெறுமையாக்கி


தாழ்மையைத் தரித்துக் கொண்டு மானிட உறவுகளைத் தேட வேண்டும் தேடி உறவு கொள்ள வேண்டும், வாழ்வளிக்க வேண்டும். அதாவது இன்று தாம் மனுஷருவேற்ற கிறிஸ்துவைக் கண்டு கொள்ளவும், அவரது மனுவுருவேற்பில் பங்கேற்கவும் வேண்டுமெனில் பாடுபடுகின்ற, குருதி சிந்துகின்ற மக்களின் வாழ்க்கைப் பாடுகளில் பங்கேற்பதேயாகும். இதுவே கிறிஸ்துவின் வெறுமையாகுதலின் மானிட அவதாரம் நமக்குத் தருகின்ற உறுதியான அழைப்பாகும்.

வண V. இராஜ்குமார்,
C.S.I – மானிப்பாய்.

**மதங்கள்..............**

"பெரும் எண்ணிக்கையில் மதங்கள் பெருகி வருகின்றன.
இது கண்டிக்கத் தக்கது. நுகர் பொருட்கள் போல்,
மதங்கள் பெருகி வருகின்றன- அவற்றால் நிறையப்பேர்
ஆதாயம் அடைகின்றனர்.
இவ்வாறு மதங்கள் அதிகரித்தால், அவை
நுகர் பொருள் போன்ற நிலைக்கு மாறிவிடும்.
அன்றாட மத நடைமுறைகளை அனைவரும்
சிரத்தையுடன் கடைப்பிடிக்க வேண்டும்.

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற்



# இந்திய மரபுக் கண்ணோட்டத்தில் இயேசுநாதரின் பிறப்பு

கிறிஸ்து பெருமானின் பிறப்பினைக் கிறிஸ்தவத் திருமறை "இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்" என்றும் - பயப்படாதிருங்கள் இதோ எல்லா மக்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம்" என்றும் குறிக்கப்பட்டுள்ளது

இயேசுநாதரின் திருப்பிறப்பைப் பற்றிய விவரம், நாம் ஏற்கனவே அறிந்ததே, இப்போ வைணவ சமயத்திலிருந்து கிறிஸ்துவைத் தமது மீட்பராக ஏற்று கொண்ட கிறிஸ்தவ கவியரசர் மகாவித்வான் கிருஸ்ணபிள்ளை அவர்கள் தாம் எழுதிய கிறிஸ்தவ காப்பியமாக "இரட்சணிய யாத்திரிகத்தில்" கன்னி பாலனாய்க் காசினியில் அவதரித்த கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றி - இந்திய கலாசாரக் கண்ணோட்டத்தில் மிகுந்த பக்தியுணர்வோடு பாடியுள்ளதை அதன் பாடல்கள் வழியாக உணர்ந்து கொள்ளலாம். அதன் பொழிப்புரை:

கிறிஸ்துவின் பிறப்பு பேய்களுக்கு எல்லாம் தலைவனான அலகையினுடைய கைகால்களை விலவிலகச் செய்கின்றது. அவனது உள்ளம் திகிலுற்றுப் பயத்தினால் பறையறைகின்றது. அவனது ஆருயிர் நடுங்குகின்றது. அவனது கருமையான முகம் குப்புற விழுந்து கவிழ்கின்றது. அவனது கொடிய வினைகளெல்லாம் குலைந்தோடுகின்றது. இத்தகைய சூழ்நிலையில் பாவ இருள் கலைந்தோட ஞானசூரியன் உதயஞ் செய்வது போல்

கிறிஸ்து பிறந்தார் என்று கூறியுள்ளது. மேலும் "இந்த அகிலாண்டத்தை மண்மை - விண்ணை பகலவனை திங்களை, விண்மீன்களை, விரிகடலை, மழையை, முகிலைத் தமது ஒரு வார்த்தையால் படைத்த அச்சுதனாகிய இறைவன் ஊனுருக்கொண்டு மனித குமாரனாய் இந்த வையகமனைத்தும் மகிழ்ச்சியடையுமாறு பிறந்தார் எனக் கிறிஸ்துவின் திருப்பிறப்புக் காட்சியை கவியரசர் கிருஸ்ணபிள்ளை இரட்சணிய யாத்திரிகத்தில் பாடியுள்ளார். பக்திச் சுவை நனிசொட்டச் சொட்டக கவிஞரின் பாடல்கள் உருவெடுத்துள்ளன.

அடுத்ததாக இத்தாலி நாட்டிலிருந்து இந்தியாவில் தமிழகத்தில் நற்செய்திப் பணியில் ஈடுபட்ட தேம்பாவணிக் கவிஞரான வீரமாமுனிவர் கிறிஸ்து நாதரின் திருப்பிறப்பைப் பற்றி இந்திய கண்ணோட்டத்தில் பாடிய பாடலின் பொருளைக் கவனிப்போம்.

உலகங்கள், காலங்கள் முதலானவற்றுக்குள்ளும் உவமை கூறுதற்கிலாத குற்றமில்லாத கன்னியாகிய மரியன்னை அளவிடற்கியலாத தந்தை, மைந்தன் தூய ஆவி என்ற மூன்றுனுள் நடுவில் விளங்குபவரும் மூச்சுடர்களைக் காட்டிலும் ஒளிமிகுந்தவராகத் திகழும் திருமைந்தனை பளிங்கு எவ்வாறு தனக்குச் சிறிதும் சேதமும் இல்லாது தன்னிடத்துப் படியும் ஒளியினை வெளியிடுகின்றதோ, அதுபோலத் தன் கன்னித் தன்மை சேதமுறாது அளவற்ற வல்லமையுடைய அமலனாகிய இயேசுபிரானைப் பெற்றுத் தந்தனள்" எனக் கூறியுள்ளார்.

கிறிஸ்துவின் பிறப்பைக் கூறும் தேம்பாவணி – கிறிஸ்து தமிழ் மாதமாகிய மார்கழி மாதம் இருபத்தைந்தாம் நாள் ஞாயிற்றுக்கிழமை இரவு பதினைந்தாம் நாழிகையில் பிறந்தார்.' எனக் கூறியுள்ளது. வீரமாமுனிவர், கிறிஸ்து பிறந்த மாதத்தினை "டிசம்பர்" எனக் கூறாது "மார்கழி" மாதம் எனக் குறிப்பிட்டது தமிழக மரபிற்கேற்க அதனை அமைத்தல் வேண்டும் என்பதற்காகவே என அறிக.

தமிழ் மரபில் கிறிஸ்துவின் திருப்பிறப்பைக் கூற முனைந்த கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிய தமிழ் கவிஞருள் ஒருவராகிய தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், கிறிஸ்துவின் பிறப்பை வியந்து போற்றிப் பாடியுள்ளார். இக் கவிஞருக்கு இறைவன் இம் மண்ணில் மனித குமாரனாகப் பிறந்தது பேரதிசயமாக பேரற்புதமாகக் காணப்பட்டது. எனவே அவர் அதனை.

“என்னோ இவ் வற்புதம்பார் ஈசனிங்கே வந்தார் புவியில்
என்னோ இவ்வற்புதம்பார் இந்நிலைமையானாரே,
என்னோ இவ்வற்புதத்தை எப்படி மறப்பாய் பாவி”

என மிக்க இனிய எளிய சொற்களால் பாடியுள்ளார். இதுவரை தமிழ் மரபுக் கண்ணோட்டத்தில் மூன்று கவிஞர்கள் கிறிஸ்து பிரானின் திருப்பிறப்பை எவ்வாறு கண்டனர் என்பதைக் எடுத்துக் காட்டாகச் சுருக்கமாகக் கவனித்தோம். அடுத்ததாக இந்திய மரபுக் கண்ணோட்டத்தில் இயேசு நாதரின் பிறப்பை இறையவதாரத்தைப் பற்றிச் சுருக்கமாகக் கவனிப்போம். கிறிஸ்தவ சமயத்திற்கே உரித்தான தனித்தன்மையைக் கைவிடாது இந்தியக் கண்ணோட்டத்தில் இயேசு நாதரின் பிறப்பை ஒரு அவதாரமாக அறிவிக்க முடியுமா? இந்திய பண்பாட்டுக்கு அடிப்படையான இந்து சமயம் இறையவதாரக் கொள்கை பற்றிக் கையாளும் கருத்துக்களின் பின்னணியில் இயேசு பிரானின் பிறப்பைப் பற்றிய உண்மையை அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளத்தக்க முறையில் எடுத்துரைக்க முடியுமா? சிந்தியுங்கள் இதைப் பற்றி ஆழமாகவும் சுருக்கமாகவும் கவனிப்போம்.

## அவதாரக் கொள்கை

இறைவன் இவ்வுலகத்தை அதிகமாய் அன்பு செய்தபடியால் - அலகையின் கோரப்பிடியிலிருந்து தத்தளிக்கும் மக்களை இரட்சிப்பதற்காக மனித அவதாரமெடுத்த இயேசுபிரான் வழியாக வந்தார். புலன்களுக்கு அப்பாற்பட்ட இறைவனுக்கும் மனிதனுக்கும், மனிதன் வாழும் இவ்வுலகிற்குமிடையே நிலவும்

உறவு என்ன என்பதை விளக்கிக்கூறும் பல்வேறு சமயங்களுள் இந்து சமயமும் ஒன்றாகும். இறைவனுக்கும் மனிதனுக்கும் உலகிற்குமிடையே உண்மையான உறவு உண்டென உரைக்கும் இவ்வுறவை விளக்கும் முறைகளில் ஒன்றுதான் இந்து சமயத்தில் நாம் காணும் அவதாரக் கொள்கை.

"அவதாரம்" என்ற சமஸ்கிருத மொழிச் சொல்லின் பொருள் - 'கீழிறங்குதல்' என்பதாகும். அதாவது இவ்வுலகும் மனிதனும் அறவழிநின்று பிறழும்போது – அறத்தை நிலைநாட்ட, இறைவனே புலன்களுக்குத் தென்படும் உருவெடுத்து வருகிறார் என்பதே. இதுவே, அவதாரக் கொள்கைக்கு அடிப்படையான கருத்தாகும். இந்து மதத்தில், இக்கொள்கை இதிகாசங்களினூடாக தெளிவாகக் காட்டப்படுகிறது. அவதாரக் கொள்கை மகாபாரதத்திலும், இராமாயணத்திலும் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளதைக் காணலாம். பகவத் கீதையில் கிருஷ்ணன் திருமாலின் அவதாரமாகத் தோன்றி அருச்சுனனுக்கு அறவழியைக் கற்பிக்கிறார். இராமாயணத்தில் திருமாலின் அவதாரமாக இராமர் தோன்றுகிறார்.

இவ்வாறு திருமாலை முழுமுதற் கடவுளாகக் கருதும் வைணவ சமயத்தில் அவதாரக் கொள்கை முழுவளர்ச்சியடைந்தது என்பதைக் காண்க. "எப்பொழுது அறம் மறைந்து மறம் மேலோங்குகின்றதோ, அப்பொழுது நான் என்னையே அவதாரமாக உருவாக்குகின்றேன் - நல்லாரைக் காப்பதற்காகவும், தீயாரை ஒழிப்பதற்காகவும் அறத்தை நிலைநாட்டுவதற்காகவும் காலாகாலங்களில் நான் இறங்கி வருகின்றேன்." – என்று பகவத்கீதையில் கிருஷ்ணபகவான் உரைக்கிறார். (கீதை IV:7,8) எனவே ஆன்மா விடுதலை அடைவதற்கான போதனையை அறிவித்து பக்தர்களுக்குத் துணையாக நின்று, அவர்களோடு உறவு கொள்ள இறைவன் அவதாரம் எடுக்கிறார் என்பதே இந்து சமயக் கொள்கையாகும்.

**கிறிஸ்துபிரான் இறைவனின் அவதாரமா?**

"அவதாரம்" என்ற பதத்திற்கு இந்து சமயம் தரும் பொருளைக் கவனித்தோம். இப்போ, கிறிஸ்தேசுவை நாம் "ஓர் அவதாரம்' என்று அழைக்கலாமா? என்பதைக் கவனிப்போம். - மூவொரு கடவுளின், இரண்டாம் ஆளாகிய "வார்த்தை" என்பவர் மனிதனாக வாழ்ந்தார் என்பது வரலாற்று உண்மை. இதனை நாம் இறைவழிபாட்டின் வழியாக அறிகிறோம். இவ்வுண்மையை எடுத்துரைக்க "Incarnation" என்ற ஆங்கிலச் சொல் வழக்கில் உள்ளது. இதன் நேரடிப் பொருள் " ஊன் ஆகுதல்" என்பது. இதனை "மாம்சம் ஆகுதல்" என்றும், புதிய ஏற்பாட்டின் தொடக்கத்தில் "மனுவுருவாகுதல்" "மனுவுரு எடுத்தல்" என்ற சொற்றொடர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. "மனுவுரு" என்பது வெளித்தோற்றத்தில் மனிதனைப் போல் கிறிஸ்து இருந்தார் என்று எண்ணுதல் தவறு. கிறிஸ்து உண்மையாகவே "மனிதன்" ஆனார் என்பதையே குறிக்கிறது. இந்தக் கருத்துடன்தான் உரோ 8:3, பிலிப்பி 2:6 வசனங்களில் இயேசுவை ஒரு மனித அவதாரமாகக் காட்டப்பட்டுள்து என அறிக. ஆகவே, நாம் கிறிஸ்துபெருமானை இறையவதாரம் எனத் தயங்காமல் கூறலாம் என்பதை இங்கு வலியுறுத்துகிறோம்.

**கிறிஸ்துபிரானின் மனித அவதாரத்தின் பொருள்**

கிறிஸ்து பெருமான் மனித அவதாரமாக இவ்வுலகில் தோன்றியதால் - அவரை 'கடவுள் - மனிதன்' (GOD – MAN) என்றழைப்பது முறையேயாகும். கிறிஸ்துவில் 'மனித இயல்பு' – 'கடவுள் இயல்பு' ஆகிய இரண்டு இயல்புகளும் இருந்தன என்பதே திருச்சபையின் நம்பிக்கை. அதாவது கிறிஸ்து மனுவுரு கொண்ட போதிலும், அவர் தமது 'இறைத்தன்மையை' இழந்து விடவில்லை. அவர் கடவுளின் வார்த்தையாக இருந்தபோதிலும் - மனிதத் தன்மையைக் கொண்டிருந்தார்.

மனிதனின் நலனுக்காக இறைவன் மனிதனாகவே உருவெடுத்தார். இந்த உண்மை இந்து மதத்தின் அவதாரக் கொள்கையில் பொதிந்துள்ளதைக் கண்டோம். மனிதனின் புலன்களைக் கடந்த இறைவன் - மனிதனை விட்டுப் புறம்பாகத் தொலைவில் நிற்பவரல்ல, அவர் மனித வரலாற்றிலேயே புகுந்துள்ளார். எனவே அவதாரக் கொள்கை வழியாக இந்து சமயத்தில் கிறிஸ்துவின் மனித அவதாரத்தின் முன்னறிவிப்பை நாம் காண்கிறோம்.

கிறிஸ்தவக் கொள்கையின்படி கடவுளின் அவதாரம் ஒன்றேயாகும் - அவர்தான் இயேசு கிறிஸ்து – கிறிஸ்துவின் அவதாரம் உண்மையாகவே வரலாற்றில் நிகழ்ந்த மாபெரும் நிகழ்ச்சி - இதுவே எமது நம்பிக்கை – வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் கிறிஸ்துவின் வாழ்க்கையை அறியமுடியும்.

கிறிஸ்து இறைவனின் ஒரே அவதாரம் என்று கூறும்போது - இறைவன் தம்மைத் தாமே முழுமையாகக் கிறிஸ்துவில் வெளிப்படுத்தினார். இறைத் தன்மையின் முழுமையும் கிறிஸ்துவில் நிலைத்துளது. தமது குமாரன் கிறிஸ்துவின் வழியாகத்தான் கடவுள் மனுக்குலத்தோடு ஒன்றாக இணைகின்றார். வெளித் தோற்றத்தில் மட்டுமன்றி உண்மையாகவே நம்மைப்போல் ஒருவராக மாறினார். மனிதனின் இன்ப – துன்பத்திலும் பங்கெடுத்தார். நம்மில் முழுமையாக அன்பு செய்தார். சிலுவை மரணத்தையும் உண்மையாகவே தமதாக்கிக் கொண்டார்.

> கடவுள் தன்மையில் விளங்கிய அவர்
> தம்மையே வெறுமையாக்கி, அடிமையின்
> தன்மை பூண்டு மனிதருக்கு ஒப்பானார்."
> (பிலிப் 2:6-7)

> அவர் நம்மைப் போல் ஒருவராய் இருப்பதால், பாவம்
> தவிர, மற்ற எல்லாவற்றிலும் - சோதனை,
> துன்பங்கள் ஆகியவற்றுக்கும் உட்பட்டவரானார்".
> (எபி: 4:15)

கிறிஸ்தவம் - கிறிஸ்துவின் மனித அவதாரத்தின் வழியாக உருக்குலைந்த மனிதருக்குப் புதுஉருவம் அளிக்கின்றது. கிறிஸ்துவின் அவதாரத்தின் வழியாக மக்கள் அனைவருக்கும் இறைவனின் மீட்பும், அன்பும் அளிக்கப்படுகின்றது. இவ்வுலகில் உள்ள பாவிகள் அனைவரையும் காப்பதற்காகவே இறைவன் மன்னுருவானார். - இறைவன் தமது அன்பைக் கிறிஸ்துவின் வழியாக அனைவருக்கும் அளிக்கவே இயேசுவின் வழியாக வந்தார்.

## இறைவனும் மனிதனும் உறவாடும் இடம் இயேசு கிறிஸ்து

கடவுள் தன்மையும் மனிதத் தன்மையும் கிறிஸ்துவின் அவதாரத்தில் இணைந்திருப்பதால் - அவரைக் கடவுளும் மனிதனும் உறவாடும் இடமாக நாம் கருதலாம். இயேசுவின் மனித அவதாரத்தின் வழியாக மனுக்குலமே உயர்த்தப்பட்டது. இறைவனின் இயல்போடு பங்கு கொள்ளும் மதிப்பை அடைந்தது மனுக்குலம்.

மேலும் கடவுளும் மனிதனும் ஒன்றித்திருக்கும் கிறிஸ்துவின் வாழ்விலேதான் - மனிதன் தனது உயரிய அழைப்பை உணர்ந்து செயல்பட முடியும். இறைவன் மனித அவதாரம் எடுத்த நிகழ்ச்சியின் வழியாக, மனிதன் இவ்வுலகில் இறைவனின் மாண்பு மிக்க படைப்பு என்ற உண்மையும் துலங்குகின்றது.

இறைவன் தம் ஒரே மகனின் வழியாக, நாம் அனைவரும் இறைவனின் மக்களாக மாறவேண்டும் என்ற நோக்குடன் நம்மை அழைக்கிறார். இதுவே இறைவனின் மனித அவதாரத்தின் நோக்கம். வார்த்தையான கிறிஸ்துவின் வழியாக யாவும் படைக்கப்பட்டது போலவே அவர் வழியாகத்தான் மனிதனும் இவ்வையகமும் விடுதலையும் மீட்பும் பெறுகின்றனர் – மனிதனும் இறையரசில் பங்கு பெறுகிறான்.

எனவே இறைவனோடு உறவாடும் வாய்ப்பை மனிதனுக்கு அளிப்பவர் – மனித அவதாரம் எடுத்த இறைமகன் இயேசுகிறிஸ்து. இவர் தமது மனுத்தன்மையோடு இணைந்த இறைத்தன்மையினால் நமக்கு வழிகாட்டியும், புதுவாழ்வுக்கு ஜீவ ஊற்றுமானவராய்த் திகழ்கின்றார்.

## கிறிஸ்துவின் பிறப்பும் மனித வரலாறும்

கிறிஸ்துவின் அவதாரம் கால வரம்பைக் கடந்தது. ஆயினும், வரலாற்றிலே உண்மையாக நிகழ்ந்த ஒரு நிகழ்வு. தமது மண்ணுலக வாழ்க்கையின் இறுதிக்குப் பின்னும், கிறிஸ்து ஒருபோதும் தம் மனிதத்தன்மையை இழக்கவில்லை. எனவே ஒரு விதத்தில் கிறிஸ்துவின் மனித அவதாரம் இன்றும் தொடர்ந்து நடைபெறும் நிகழ்வு. ஏனெனில், ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன், ஒரு குறிப்பிட்ட இடத்தில் - காலத்தில் நிகழ்ந்த மனித அவதாரம் - இன்றும் வல்லமை உடையதாய்த் திகழ்கின்றது. மனிதனுக்குத் தம் அன்பை வெளிப்படுத்தும் இறைவனின் மீட்பு – மனித வரலாற்றின் வழியாகவே அவனுக்கு அளிக்கப்படுகின்றது. இந்த அன்புத் திட்டத்தையே (எபிரே 1:1-2, உரோ 2:14 -16) இதனை நாம் மீட்பின் வரலாறு என்று அழைக்கின்றோம். தமது அவதாரத்தின் வழியாக கிறிஸ்து மனிதனை இறைவன் விரும்பும் புது மனிதன்" எவ்வாறு வாழ வேண்டும் என்பதற்கு தமது அவதாரமே முன்னடையாளமாக அமைந்துள்ளது என்கிறார். அவரில் மீட்பின் வரலாறு முழுமை பெறுகின்றது. அவரில் மனித வரலாறு தன் நிறைவைக் காண்கிறது.

## முடிவுரை

இறைவன் மனிதனின் நலனுக்காக –அறத்தை நிலைநாட்டுவதற்காக, இப்பூவுலகில் மனிதனோடு உறவு கொள்ள இயேசுபிரானின் வழியாக வந்தார். இந்தப் பொருளே அவதாரக் கொள்கையின் அடித்தளமானது. எனவே பல்வேறு அவதாரங்களை ஏற்று அன்புணர்வோடும், பக்தியுணர்வோடும் இறைவனிடம் பற்றுக் கொண்டு வாழ்வோருக்கும், இறைவன் தன் மீட்பின் வல்லமையை எண்பித்துள்ளார் எனக் காண்க.

எனினும், அவதாரக் கொள்கையின் உட்பொருளைக் கிறிஸ்தவம் தனது தனித்தன்மையைத் தெளிவாக விளக்கியுள்ளது. அதாவது, இறைவனின் அன்பின் முழுமை – மனித அவதாரமான


கிறஸ்துவின் வழியாகவே நமக்கு அளிக்கப்படுகின்றது. கடவுள் மனிதனாகிய கிறிஸ்துவில் மனிதன் புதுப்படைப்பாக மாறுகிறான். இதுவே நத்தார் விழாவின் மையப் பொருள். இதனைக் குறிப்பாக ஏழைகளுக்கும், அடக்கப்பட்டோருக்கும் துயருற்றிருப்போர்க்கும் அறிவியுங்கள் - அவர்களும் இயேசு பாலகனைத் தரிசித்து - இந்த உண்மையை உள்வாங்கி முழு வாழ்வைப் பெற்று மகிழ உதவுங்கள்.

உங்கள் அனைவர்க்கும் கிறிஸ்துபிரானின் ஆன்மீக வாழ்த்துக்கள் உரித்தாகுக,

அருளாளர்.

## William Barclay

**Tells the story of a missionary who went to an Indian village and told the story of Jesus. Then in the evening, he showed a slide presentation of Jesus' life. He projected the pictures against the white – washed walls of a house – when the picture of Jesus on the cross appeared – a man leaped up from the audience and ran to the wall – "Come down from that cross, Son of God! – he cried – "I not you, should be hanging there"**



# இயேசுவின் வெறுமையாகுதல்

**"அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார்"- பிலி: 2:6-7**

இதன் பொருள் எதைக் குறிக்கிறது. எமது இயேசுக் கிறிஸ்து திருத்துவத்தினை வெறுத்து வெறுமையாய் மனிதனாக வாழ்ந்தார். அந்த வெறுமையான வாழ்க்கைக் கூடாக மானுடர்க்கான ஐஸ்வரியம் கிடைக்கச் செய்தார். ஏசாயா 53ம் அதிகாரம் அவருடைய வெறுமை பற்றிக் கூறுகிறது. "அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமும் இல்லை, அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அனுபவித்தவருமாயிருந்தார். அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார். நம்முடைய மீறுதல்களின் நிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களின் நிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்".

இப்படி ஏசாயா தீர்க்கர் கூறுவதன் கருத்தென்ன? இயேசு கிறிஸ்து தனது அழகு சௌந்தரியத்தை இழந்து, எமக்கு அவற்றைத் தந்தார். தான் மனுஷரால் புறக்கணிக்கப்பட்டு, எமக்கு சந்தோஷத்தைக் கொடுத்தார். தான் காயப்பட்டு நொறுக்கப்பட்டு எம்மைக் குணமாக்கினார். எனவே இயேசு தன் வாழ்வை வெறுமையாக்கிக் எம்மை ஐஸ்வரியம் நிறைந்தவராக்கினார். ஐஸ்வரியம் என்பது வெறும் செல்வம் அல்ல சகல சந்தோஷங்களையும் குறிக்கிறது. எமது சந்தோஷங்களுக்காகத் தன்னை வெறுமையாக்கினார்.

கிறீக் Greek மொழியில் 'Kenosis' என்ற சொல் வெறுமை தரித்திரம் அடிமை என்ற கருத்துக்களைக் குறிக்கிறது. தெய்வீகத்தை முழுதும் விட்டுத் தன்னை வெறுமையாக்கினார் ஏன்? மனிதராகிய எமக்கு ஜீவனும் சந்தோஷமும் கிடைக்க வேண்டும்

என்பதற்காகவே இயேசு கிறிஸ்து பகையைச் சிலுவையினால் கொன்று இரு திறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார் என பவுலடிகளார் எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் குறிப்பிடுகிறார்.

எனவே Kenosis என்ற கிரேக்க பதம் வேலைக்காரன் (Servant) அடிமை (Slave) துன்பப்படும் மனிதன் (Suffering man) என்ற கருத்துக்களைக் கொடுத்து இயேசு மனிதருக்காகத் தரித்திரரானார் என்ற அர்த்தத்தை விளக்கி நிற்கிறது. இயேசு கிறிஸ்து,

01. தமக்கேயுரிய தெய்வீகத்தை வெறுத்தார்.
02. பரலோக சிங்காசனத்தை வெறுத்தார்.
03. நித்திய குமாரனாக இருந்தும் மனுஷ குமாரனாகி துக்கம் அனுபவித்தார்.

இதுவே இயேசுவின் தரித்திரம். இந்தத் தரித்திரங்களை ஏற்று எம்மை ஐஸ்வரியராக்கினார். அவர் "ஆதியிலே தேவனோடிருந்தார்" என்று யோவான் சுவிஷேசம் குறிப்பிடுகிறது.

மாற்கு சுவிஷேடகர் வெறுமை பற்றிக் கூறும் போது, இயேசுவின் குடும்ப வரலாற்றைக் கூறாது, அவர் அடிமையாக தன்னை வெறுமையாக்கி – தனது ஊழியத்தின் மூலம் பல அற்புதங்களைச் செய்து நம்மை எல்லா நிறைவும் பெற வைத்தார். காடுகளிலும், மலைகளிலும், வனாந்தரத்திலும், கடலிலும் நடந்து திரிந்து, கண் பார்வை கொடுத்தார். பிசாசுகளைத் துரத்தினார். நடக்கப் பெலன் கொடுத்தார். நோய்களினின்றும் விடுதலை கொடுத்தார். மரணத்தினின்றும் ஜெயம் கொடுத்தார். பாவத்தினின்றும் மீட்டுக் கொடுத்தார். இவை யாவும் அவர் எமக்குக் கொடுத்த ஐஸ்வரியங்கள் அல்லவா?

இயேசு ஒரு பூரணமான பாத்திரம், அந்தப் பாத்திரத்தினுள்ள எல்லாவற்றையும், மரண பரியந்தம் எமக்கு

ஊற்றினார். எம்மை ஐஸ்வரியராக்கித் தன்னை தரித்திரனாக்கினார். ஏசா 53:12, பிலிப் 2:8 வசனங்கள் கூறுவது போல அவர் எல்லாப் பூலோக பரலோக ஐஸ்வரியங்களையும் தனக்கெடாது எமக்குத் தந்து தன்னைத் தரித்திரராக்கினார்.

மகிமையடைதல் என்பது பெரிய ஐஸ்வரியம். நமது வாழ்வில் மகிமையாயிருத்தல் என்றால் சகல புகழுடனும் இருத்தல் என்பது கருத்தாகும். அவர் தரித்திரராகத் தம்மை மாற்றாவிடின் நாம் ஐஸ்வரியராய் வந்திருக்க முடியுமா?

அன்னை திரேசாவைப் உதாரணமாகப் பார்ப்போமானால், அவர் இத்தாலி நாட்டில் பிறந்து வடஇந்தியாவிற்கு வந்து மும்பை நகரில் குப்பைத் தொட்டிகளுள் வறுமையால் போடப்பட்ட குழந்தைகளை எடுத்துப் பல அனாதை இல்லங்களை உருவாக்கித் தன்னை வெறுமையாக்கி ஏழைகளை வாழச் செய்தார். தனது செல்வம், சுகம், செல்வாக்கு எல்லாவற்றையும் இழந்து ஏழைகளுக்காக, காயப்பட்டோருக்காக, அனாதைகளுக்காக வாழ்ந்தார். இது சாதாரண ஒரு பெண்ணின் வெறுமை.

ஆனால் தேவாதி தேவன், ராஜாதி ராஜனான இயேசுராஜன் தன்மை வெறுமையாக்கி, எம்மை மகிமையடையச் செய்த நன்றியை நினைந்து வாழ்வோமா?

திருமதி கிருபா பவசிங்கம்.



# இயேசுவின் தரித்திரம் - எமது ஐஸ்வரியம்

மெசியா என்பதன் கருத்து அபிஷேகம் செய்யப்பட்டவர் என்பதாகும். எதற்காக இவ்வபிஷேகம் என்பதனை சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். அபிஷேகம் என்பது சமஸ்கிருதம் சார்ந்த சொல். இது திருஅருட்பொழிவு என தமிழில் கூறமுடியும். சர்வவல்லமையுள்ள இறைவனின் பிரதிநிதியாக இருந்து மக்களை சரியான முறையில் வழிநடத்துவதற்காகவே திருஅருட்பொழிவு நடாத்தப்படும். இது ஓர் அரசனை அல்லது மதகுருவை பிரதிநிதித்துவப்படுத்தும் செயலாக குறிப்பிடப்படும். இதன் மூலம் அந்நபர் தனிப்பட்ட மரியாதைக்கும் மதிப்பிற்கும் உள்ளாகின்றார்.

இஸ்ரவேலரின் வரலாற்றை நோக்கும் போது அரசர்களும், குருமார்களும், தீர்க்கதரிசிகளினால் திருஅருட்பொழிவு பெற்றுள்ளனர். இவ்வகையான மனிதர் மக்களினால் தனிப்பட்ட மதிப்புக்கு பாத்திரமாயுள்ளனர். இதற்கான காரணம் இஸ்ரவேல் மக்கள் தாம் இறைவனினால் உடன்படிக்கை மூலம் தெரிவு செய்யப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டதனால் உலகிலுள்ள ஏனைய மக்களினத்தை விட எல்லா வகையிலும் மேலானவர்கள் என்னும் சிந்தனையேயாகும். இதற்கான ஆதாரங்களை ஆதி 12:3, 22:12,18. இப்படியான நிலையில் இஸ்ரவேல் மக்களினத்திலும், அவர்களினால் பராமரிக்கப்படும் விலங்கினங்களிலும் தலையீற்று (முதற்பேறு) கர்த்தருக்கென பிரத்தியேகப்படுத்தி பரிசுத்தப்படுத்தினார். யாத் 3:12 இஸ்ரவேலில் பிறக்கும் அனைத்து ஆண்களையும் விருத்தசேதனம் செய்தனர். ஆதி 17:12 இறைவனின் திட்டமேலாண்மைக்காக தாவீது அரசனுக்கு ஒரு வாக்குறுதி கொடுக்கப்பட்டது. 2 சாமு 7:10-16, இதன் மூலமாக தமது மக்களின் நலன்கருதி தாம் வகுத்திருக்கும் திட்டத்தை உறுதி செய்தார்.

ஆனால் இஸ்ரவேலரின் அரசு கி.மு 722இலும், யூதா அரசு கி.மு 537இலும் முறையே அசீரியராலும், பாபிலோனியராலும் அடிமைப்படுத்தப்பட்டது. இத்தகைய நிலைப்பாட்டிற்கு காரணம் தங்களின் தவறான நடவடிக்கைகளே என்ற சிந்தனை

தீர்க்கர்களினால் எடுத்துக்காட்டப்பட்டது மாத்திரமல்ல, மக்களைத் தேற்றுவதற்காக இறைவாக்கு மாறாதவர் தமது மக்களை நல்லதாக வழிநடத்துவார் என்னும் சிந்தனை திருமறையில் காலத்துக்கு காலம் எடுத்துரைக்கப்பட்டிருந்தது. இதனை எண் 24:17, ஏசாயா 7:14, 60:3 போன்ற வாக்கியங்களை எடுத்துக் கொள்ளலாம். எருசலேமின் வீழ்ச்சியின் பின்னர் மக்கள் குழப்பமடைந்தாலும், அவர்களுக்கு திருமறையும் தீர்க்கதரிசிகளும் வழிகாட்டத் தவறவில்லை. திருமறை வல்லுனர்கள் திருமறையிலிருந்து ஆதாரங்களை எடுத்துக் காட்டி மக்களை எதிர்பார்ப்புடன் சிறந்த நிலைபரத்தை முன்னிட்டு பலப்படுத்தியது மட்டுமல்லாமல் எருசலேம் தேவாலயம் வழிபாடு செய்வதற்கு இல்லாத நிலையில் ஓய்வு நாள் ஆசரிப்பு நியாயப் பிரமாண ஆசரிப்பு ஆகியவற்றை வலியுறுத்தி நம்பிக்கையில் வலுவிழந்து போகாமலிருக்கும்படி பார்த்துக் கொண்டனர்.

இவ்வகையான நிலையிலேயே மெசியா என்னும் கருத்துவாக்கம் அவர்களிடையே வலுவடைந்தது. தங்களின் இறப்பு நிலையை எய்துவதற்கு தாவீதின் வம்சத்திலிருந்து ஓர் அரசர் தோன்றுவார். அவ்வரசரின் மூலம் எமது சந்ததியினர் இறப்பு நிலையை அடைவர் என்றெண்ணினர். சங் 132:11 இதன் மூலம் தமது மக்களை மீட்கவும் தமது கரத்தை உயர்த்தவும் ஆண்டவர் தவறமாட்டார் என்றெண்ணினர். இதற்காக இந்நோக்க எதிர்பார்ப்புடன் இறைவனை நோக்கி வேண்டுதல் செய்தனர். இதனை சங் 84:10, 132:10 மூலம் இவைகளை கண்டுரைக்க முடியும். இப்படியான எதிர்பார்ப்பு தீர்க்கதரிசிகளின் கூற்றினால் வலுப்பெற்றது, இஸ்ரவேலருக்கான மெசியா எங்கு எப்படியான நிலையில் தோன்றுவார் என்பதை மீகா 5:2, ஏசா 7:14, யோவான் 1:14 தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

இயேசு தோன்றிய காலத்தில் உலகத்தின் அனைத்து தேசங்களிலும் மனிதரின் இழிவு நிலையும் அதிலிருந்து விடுதலை பெற இறைவனே மனிதனாக அவதரித்தால் தான் தீர்வு கிடைக்கும் என்னும் நம்பிக்கை அனைத்து சமயங்களிலும் கூறப்பட்டுள்ளது. இதனை கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் கட்டுரை வரைந்துள்ளேன்.

இப்படியாக தோன்றிய இறை குழந்தையை தரிசிப்பதற்காக ஏசாயா 60:3ல் யார் வருவார்கள் எனவும் கூறப்பட்டுள்ளது. இங்கு ஒரு தவறு நடந்தது என்பதையும் நாம் யாவரும் அறிவோம். தோன்றும் குழந்தை ஐஸ்வரியமானது என ஞானிகள் நினைத்து ஏரோது ராஜாவின் அரண்மனையில் சென்று தேடினர். அங்கு இல்லாதபடியால் நட்சத்திரம் சரியான இடத்தைக் காட்டி குழந்தையைத் தரிசித்தனர். இந்த ஞானிகளில் அறிவு செய்த கொடுமையான விளைவு குறித்து ஏரேமியா 31:15 ஏற்கனவே கூறியுள்ளார். அத்துடன் ஏரோது ராஜாவின் கொடும் பார்வையிலிருந்து தப்புவதற்கான வழியானது ஓசியா 11:1ல் கூறப்பட்டுள்ளது. அதே பிரகாரமாக மத்தேயு 2:13,14ல் நிகழ்கின்றது.

இங்கு லூக்கா ஆசிரியர் இன்னொரு செய்தியை கூடுதலாகத்தருகின்றார். மனுவுருவான இறைகுமாரன் மாட்டுத் தொழுவத்தில் காணப்படுகின்றார். (லூக்கா 2:7) அத்துடன் அவர் குறித்த நற்செய்தி முதன் முதல் மேய்ப்பர்களுக்கு தான் லூக்கா 2:8ல் கூறப்படுகிறது. இதனைக் கேட்ட மேய்ப்பர்கள் சென்று குழந்தையைத் தரிசித்துச் சென்றனர் என லூக்கா 2:15-17இல் உள்ளது. இதேவேளை எரேமியா 23:5,6 பகுதி குறிப்பிட்ட செய்தியை அப்படியே யூதர்கள் நம்பியிருந்தபடியால் உண்மையான இறைகுமாரனை கண்டு உணரத் தவறிவிட்டார்கள். எப்படியெனில் உலகப் பிரகாரமான ஐஸ்வரிய நிலையில் தான் எதிர்பார்த்திருந்தனர். மத்தேயு ஆசிரியர் கூட மத் 2:4,5ல் யூதமைய வல்லுனரின் நிலையைப் பற்றிக் குறித்துக் காட்டியுள்ளார்.

உலகிலுள்ள மனுக்குலத்தவரின் தவறிய நிலையிலிருந்து செம்மையான நிலைக்கு கொண்டு வர இறைவன் மனுவுருவேற்றார். தமது அளப்பரிய ஐஸவரிய நிலையிலிருந்து மனுக்குலத்தவரின் தரித்திர நிலையை எமக்காக தானாக முனவந்து ஏற்றுக் கொண்டார். இதன் பலனாக இயேசுநாதர் தரித்திர நிலைக்கும் நாம் ஐஸ்சுரிய நிலைக்கும் வந்தோம். இதனை நாம் யாவேரும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

ஆனால் இன்று நிகழ்வதென்ன? கிறிஸ்தவர்களாகிய பெரும்பாலானவர்கள் ஐஸவரிய நிலையில் தொடர்ந்து இருக்க விரும்புகிறோம். எப்பாடுபட்டாவது ஐஸவரிய நிலையை பேணிப்பாதுகாப்பது பல வகையான குறுக்கு வழிவகைகளை கையாளுகின்றோம். தமது பணநோட்டில் இறைவனை நம்புகின்றோம் என அச்சடித்த அமெரிக்க தேசத்தினர் கூட இதற்காக படும்பாடுகளை நாம் யாவரும் அறிவோம். அத்துடன் கிறிஸ்துவை ஆசீர்வாதத்தின் இறைவனாக நற்செய்தியாக அறிவித்துள்ளோம், அறிவிக்கின்றோம், அறிவிக்க முயற்சிகளை மேற்கொள்கிறோம். ஆனால் கிறிஸ்து காட்டியதென்ன? துன்ப நிலையில் கூட சந்தோஷமாக வாழ்வது எப்படி என்பதுதான் சிலுவையை எடுத்து அவரைப் பின்பற்ற வேண்டும் என்பதன் கருத்து அதுதான், இன்று நாம் வாழும் சூழலில் பல வகையான தரித்திரர்கள் உள்ளனர். இந்நிலையை போக்க எமது ஐஸவரிய நிலையைத் துறக்க வேண்டிய நிலையில் கிறிஸ்தவர்களாகிய நாம் உள்ளோம். இந்த சவாலை ஏற்க ஆயத்தமா என பரிசுத்தாவியர் நம் ஒவ்வொருவரையும் கேட்கிறார். என்ன பதில் கூறப் போகின்றோம்? கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும் நியாயத் தீர்ப்பையும் முன்னிறுத்தி செயல்பட ஆயத்தமாவோமாக,

இதற்காகவே நாம் நீரினாலும் பரிசுத்தாவியினாலும் அபிஷேகம் பெற்றோம் என்பதை மறந்து போகக் கூடாது.

வண. பெ. ஜெயராஜா

## THE FOOL'S PRAYER

**The person who is concerned about nothing is a fool.**

**The person who is concerned about every thing is a fool**

**Lord help me to be concerned about the things I should.**

**And not to worry about the things I shouldn't.**

# இயேசுவின் தரித்திரமும் எங்கள் ஐஸ்வரியமும்

**முன்னுரை:**

எல்லா மதங்களும் பொதுவாக கடவுள் மனுவுரு எடுத்ததைப்பற்றி பேசுகின்றனர். சிறப்பாக இந்து மதத்தில் இப்பதம் அவதாரம் என்ற எண்ணக்கருவின் ஊடாக விளக்கப்படுகின்றது. இந்துமதம் பேசும் அவதாரமும் கிறிஸ்தவ மதம் கூறுகின்ற மனுவுரு ஏற்றலும் ஒன்றில் இருந்து ஒன்று வேறுபட்டதாகும். இந்துமத அவதாரத்தில் கடவுள் ஒன்றுக்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களில் அவதாரம் எடுக்கின்றார். குறிப்பாக இவ் அவதாரங்கள் மனுஷ அவதாரமாகவும் மிருக அவதாரங்களாகவும் அமைகின்றன. மேலும் கடவுள் மனுஅவதாரம் எடுத்தாலும் பூரண தெய்வீக நிலையில் இருப்பதை அவதானிக்கலாம். ஆனால் கிறிஸ்தவ திருமறையில் இயேசுவின் மனுவுருவைப் பற்றிப் பார்க்கும் போது இவ் அவதாரப்பிறப்பு வரலாற்றில் ஒரே ஒரு முறை நடைபெற்றதொன்றாகக் காணப்படுகின்றது. மேலும் இவ் அவதார நிகழ்வின் போது கடவுள் பூரணமாக மனித நிலையில் இருந்தபடியால் தெய்வீகம் முற்றாக மறைந்து போனதை அவதானிக்கலாம். இதனால் கடவுள் முற்றுமாக தரித்திரரின் நிலையை அடைகின்றார். இதனைத்தான் தூய பவுல் பிலிப்பியர் 2:5-11ம் வசனம் வரையுள்ள பகுதியில் இயேசு மனுவுரு எடுத்து தன்னைத்தான் வெறுமையாக்கி அடிமையின் தாழ்மையின் ரூபத்தை எடுத்தார் எனக் கூறுகின்றார். இங்கு தெய்வீகம் மறைக்கப்பட்டு மனுஷீகம் வெளிப்படுத்தப்படுகின்றது. மேலும் இயேசுவின் செல்வந்த நிலை மறைக்கப்பட்டு தரித்திர நிலை வெளிப்படுத்தப்படுகின்றது. இத் தரித்திர நிலை இயேசுவின் பிறப்பிலும், வாழ்விலும், பணியிலும், மரணத்திலும், உயிர்ப்பிலும் வெளிப்படுத்தப்படுவதை அவதானிக்கலாம். அவரின் இத்தரித்திர அனுபவம் தரித்திரருக்கு பெருமை தரும் நிறைவு தரும் அனுபவமாக மாறுகின்றது.

## இயேசுவின் பிறப்பும் தரித்திரருக்குக் கிடைத்த பெருமையும்

இயேசு வாழ்ந்த காலப்பகுதியில் யூத மக்கள் ரோமர்களுக்கு அடிமைகளாக இருந்தார்கள். இவ்வடிமைத்தன வாழ்வுக்கு எதிராக செலோத்தியர்கள் வாளேந்திப் போராடினார்கள். மேலும் யூத மதத்தின் சட்டங்களைப் பாதுகாக்கும் வகையிலும், மேசியா கொள்கையை உறுதிப்படுத்தும் வகையிலும், பரிசேயர், சதுசேயர், மறைநூல் வல்லுனர்கள், அரும்பாடுபட்டனர். மேலும் தனி மனித ஆன்மீகத்தை வளர்த்த எசினீரியர்கள் என்ற இன்னுமொரு மதவகுப்பினர் காணப்பட்டனர். இவர்களை விட யூத திருச்சட்டத்தை வாசித்து கடைப்பிடிக்க முடியாமல் தவிர்த்த, இன்னுமொரு மக்கள் திரள் காணப்பட்டனர். இவர்களை பாவிகள் என்று அழைத்தனர், என சன்ரெஸ் என்ற அறிஞர் தனது நூலில் (இயேசுவும் யூத சமயமும்) கூறுகின்றார். இப்பாவிகள் என்ற வகுதிக்குள் பெண்கள், சிறுவர்கள், மேய்ப்பவர்கள், விவசாயிகள், மீனவர்கள், விலைமாதுக்கள் அடங்குவர். இப்பேற்பட்ட புரட்சிவாதிகள், மதவாதிகள், ஆன்மீக வாதிகள், பாவிகள் போன்றவர்கள் நிறைந்த பின்னணியிலேயே இயேசு பிறக்கின்றார்.

இயேசுவின் பிறப்பின் போது சமூகத்தில் தரித்திரர் என்று கருதப்பட்ட மக்களுக்கு உயர்வு நிலை கிடைத்ததைக் காண்பிக்கின்றது. சிறப்பாக சமூகத்தில் இரண்டாம் தரப்பிரஜைகளாகக் காணப்பட்ட ஓரம் கட்டப்பட்ட கலப்பின மக்களின் பின்னனியிலேயே பிறந்தார் என மத்தேயு 1:1-17 வரையுள்ள பகுதியில காணலாம். இதன்படி தாமார், றூத், றாகாப், பட்சேபால், மரியாள், போன்ற பெண்களின் பரம்பரையிலேயே இயேசு பிறப்பதாக மத்தேயு காண்பிக்கின்றார். இப் பெண்கள் சமூகத்தில் தரித்திரராக இருந்த போதிலும் இத்தரித்திர தன்மைக்கு முக்கியத்துவம் கொடுத்து இவர்களுக்கு பெருமை சேர்ப்பதற்காகவே இயேசு இவர்கள் பரம்பரையை தேர்ந்தெடுக்கின்றார். மேலும் ஆன்மீகத்தில் மமதை கொண்டிருந்த யூத மக்களை தள்ளிவிட்டு திருச்சட்டம் கொடுக்கப்படாத சாஸ்திரிகளுக்கு தன்னை இயேசு

வெளிப்படுத்தியதும், ஆன்மீகத்தில் தரித்திர நிலையில் இருந்த மக்களை உயர்த்துவதற்காகவே, என கலாநிதி டயன்சன் கார் கூறுகின்றார். மத்தேயு 2:1-12 வரையுள்ள பகுதியில் இயேசு பிறந்த போது பெத்தலகேமில் வாழ்ந்த யூதர்கள் அவரைச் சென்று பார்க்கவில்லை. மாறாக மற்றவர்களால் தரித்திரர்கள் என்று கருதப்பட்ட ஞானிகள் சென்று பார்வையிடுவதை அவதானிக்கலாம். இவர்களுக்குத் திருச்சட்டம் வழங்கப்படவில்லை. இறைவாக்கினரும் மேசியாவைப் பற்றி இவர்களுக்கு இறைவாக்குக் கூறவில்லை. மற்றவர்கள் பார்வையில் ஆன்மீகத்தில் தரித்திரர்கள் என்று கருதப்பட்ட இவர்களை, தரித்திரராகிய இயேசு தன்னை இவர்களோடு அடையாளம் ஆக்கியதன் விளைவாக, இவர்களுக்குப் பெருமையைத் தேடிக் கொடுத்தார். மேலும் சமூகத்தில் பாவிகள் என்று கருதப்பட்ட மேய்ப்பர்களுக்கு இயேசுவின் பிறப்பு அறிவிக்கப்பட்டதன் ஊடாக பாவிகளின் நிலையும் சமூகத்தில் உயர்வடைந்தது. லூக்கா 1:46-55 வரையுள்ள பகுதியில் மரியாளின் பாடலை நாம் அவதானிக்கலாம் இங்கு யூத ஆணாதிக்க வாதிகள் தங்களின் உதவியின்றி பெண்கள் கருத்தரிக்க முடியாது என்ற சிந்தனையில் பெண்களை அடிமைகள் ஆக்கினர். எனவே இப்பின்னணியில் இயேசுவின் பிறப்பு ஆண்களின் உதவியின்றியே பெண்கள் கருத்தரிக்க முடியும் என்ற நிலையை காண்பித்து, யூத ஆணாதிக்க வாதத்திற்கு அடி கொடுத்து, பெண்களுக்கு விடுதலை வளங்கி அவர்களிற்கு பெருமையை சேர்த்துக் கொடுத்ததாக கொறிய இறையியளாலரான சன் சின் சோங் கூறுகின்றார். எனவே ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது இயேசு தரித்திர நிலையைத் தெரிந்தெடுத்ததன் ஊடாக சமூகத்தில் தரித்திரர் என்று கருதப்பட்ட பெண்கள், மேய்ப்பர்கள், கடவுளின் மக்கள் போன்றவர்களுக்கு உயர்வு நிலை கிடைப்பதை அவதானிக்கலாம். இயேசு தன்னை சிறுமைப்படுத்தியதன் ஊடாக சமூகத்தில் சிறுமைப்பட்டவர்கள் பெருமைப்பட வாய்ப்பு ஏற்பட்டது.

**இயேசுவின் வாழ்வினாலும் பணியினாலும் தரித்திரருக்குக் கிடைத்த பெருமை:**

இயேசுவின் வாழ்வும் பணியும் தரித்திரரின் நிலையை உயர்த்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்டதை நாம் அவதானிக்கலாம். மத்தேயு 5:3 இல் தரித்திர நிலையில் வாழ்ந்த மக்களை இயேசு கடவுளின் மக்கள் எனக் கூறுகின்றார். இந்தியாவில் வாழ்ந்த காந்தியும் ஒதுக்கப்பட்ட மக்களை கரிஜன்கள் அல்லது கடவுளின் மக்கள் எனக் காண்பித்து அவர்களின் நிலையை உயர்த்துகின்றார். மேலும் மாற்கு 1:1-11 வரையுள்ள பகுதியில் இயேசு, யோர்தான் நதியில் யோவான்ஸ்ஞானகனிடம் திருமுழுக்குப் பெறுவதை அவதானிக்கிறோம். அக்காலத்தில் பாவ மன்னிப்பிற்காக பிரதான ஆசாரியரை மையமாகக் கொண்ட எருசலேம் ஆலயத்தில் பலியிடும் நிகழ்வு நடைபெற்றது. ஆனால் இயேசுவோ இச் செல்வந்த ஆன்மீகத்தை நிராகரித்து பாவமன்னிப்பு வளங்கும் ஏழைகளின் ஆன்மீகம் ஆகிய யோர்தான் நதியில் திருமுழுக்கைப் பெற்று, அவர்களின் ஆன்மீகத்தை ஏற்றுக்கொள்கின்றார். மேலும் லூக்கா 4:16ல் தன்னுடைய பணியில் தரித்திரரே முதலிடம் பெறுகின்றார்கள் என இயேசு கூறுகின்றார். அதன்படி ஏன் தரித்திரர்கள் தரித்திர நிலையில் இருக்கின்றார்கள் என்பதைக் காட்டுவதே தன் பணி என்கின்றார். மேலும் சமூகத்தில் வரிவசூலிப்பவர்களாக இருக்கும் மக்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாக மாறிவிட முடியாது. ஆனால் லூக்கா 19:9ல் வரிவசூலிப்பவரான சகேயுவிற்கு ஆபிரகாமின் மகன் என்ற பெயரை இயேசு வளங்குகின்றார். மேலும் லூக்கா 13:16இல் கூன் விழுந்த பெண்ணுக்கும் ஆபிரகாமின் குமாரத்தி என்ற பட்டத்தை வளங்குகின்றார். மாற்கு 1:40-45 வரை தொழுநோயாளியாக இருந்த மனிதனை ஆண்டவர் இயேசு கட்டி அணைக்கின்றார். நோயாளிக்குச் சுகம் கிடைத்ததைவிட அவன் கட்டி அரவணைக்கப்பட்ட நிலை சமூகத்தில் இழந்து போன அவன் அடையாளத்தை மறுபடியும் பெற்றுக் கொடுக்கும் ஒரு பணியாகக் காணப்பட்டது. அடைக்கலான் குஞ்சுகளைக் கூட கடவுள் தம் கரிசனையில் வைத்துள்ளார் என இயேசு கூறியதன் ஊடாக

சமூகத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனிலும் கடவுளின் கரிசனை காணப்படுகின்றது எனக் காண்பிக்கின்றார். இவ்வாறாக தரித்திர உருவெடுத்த இயேசு சமூகத்தில் தரித்திரராக இருந்த மக்களை தன் வாழ்வாலும், பணியாலும், செல்வந்த நிலைக்கு உயர்த்தியது மாத்திரம் அன்றி சமூகத்தில் அவர்கள் அடையாளத்தையும் உயர்த்த வழிவகுத்தார்.

**மரணத்தாலும் உயிர்ப்பாலும் தரித்திரருக்குக் கிடைத்த பெருமை:**

இயேசுவின் மரணமும் உயிர்த்தெழுதலும் சமூகத்தில் இயேசுவின் தரித்திர நிலையையும் தரித்திரருக்குக் கிடைத்த உயர்வு நிலையையும் காண்பிக்கின்றது. இயேசுவின் மரணத்தை உற்று நோக்கும் போது அங்கே யூதமதவாதிகளினதும் அரசியல் வாதிகளினதும் அநீதியான செயல்பாட்டை நாம் காணலாம். இங்கு இயேசு பலமற்றவராகவும், குரலற்றவராகவும், அரசியல் மதவாதிகளுக்கு முன்பதாக இருப்பதைக் அவதானிக்கலாம். இது இயேசுவின் முழுமையான வெறுமையாக்கலைக் காண்பிக்கின்றது. தெய்வ நிலையை முற்றும் திறந்த நிலையில் மனிதனாக தரித்திர நிலையை அனுபவிப்பதைக் காணலாம். இயேசு குற்றமற்றவராக இருந்த போதிலும் அதனை நிரூபிக்க முடியாத அளவிற்கு தன்னை வெறுமையாக்குகின்றார். இதன் மூலம் சமூகத்தில் அநியாயமாகக் கொல்லப்படும் அப்பாவிகளோடு தன்னை அடையாளப் படுத்துகின்றார். இதன் காரணமாகவே பூரண தரித்திர நிலையை தரித்திரர்களின் அடையாளச் சின்னமாகிய சிலுவையை தன் மரணத்திற்காகத் தெரிந்தெடுத்து, அதிலிருந்து கொண்டு “என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்” எனக் கதறுகின்றார். இக் குரல் கைவிடப்பட்ட மனிதனின் அவலக்குரல் ஆகும். சமூக பொருளாதார, அரசியல் கலாச்சார வன்முறைகளால் பாதிக்கப்பட்டு குரலெழுப்பும் தரித்திர மக்களின் குரல்களோடு தன்னையும் இணைத்து அவர்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுக்கின்றார்.

இயேசுவின் மரணத்திற்கு முன்னர் இயேசு ஏற்படுத்திய பாதங்களைக் கழுவும் நிகழ்வும், திருவிருந்து நிகழ்வும் இயேசுவின் தரித்திர நிலையை முழுமையாகக் காண்பிக்கின்றது. பாதங்களைக் கழுவும் நிகழ்வின் ஊடாக இயேசு தமமுடைய சீடர்களை நோக்கி ஆண்டவரும் போதகருமாகிய நான்உங்கள்பாதங்களைக் கழுவினதுண்டானால் நீங்களும் மற்றவர்களின் பாதங்களைக் கழுவுங்கள் எனக் கூறியதன் மூலம் தான் மக்களுக்காக தன்னை வெறுமையாக்கி தரித்திர நிலையை எடுத்தது போல நீங்களும் மற்றவர்களுக்காக தரித்திரராகுங்கள் என அழைக்கின்றார். மேலும் திருவிருந்தை ஏற்படுத்தியதன் ஊடாக இயேசு எங்களை தனது நிலைக்கு உயர்த்தினார், எனப் பவுல் 2 கொரி 8:9இல் கூறுகின்றார். இங்கு இயேசு திருவிருந்தை ஏற்படுத்தியதன் ஊடாக நாங்களும் எங்களிலும் பார்க்கக் குறைந்த நிலையில் உள்ள மக்களை அதாவது, அடிமட்ட நிலையில் உள்ள மக்களை எங்கள் நிலைக்கு உயர்த்த வேண்டும் என்பதே வெளிப்படுகின்ற செய்தியாகும். எனவே இவ்விரண்டு நிகழ்வுகளும் சமூகத்தில் தரித்திரரை உயர்த்துவதற்காக ஆண்டவரால் ஏற்படுத்தப்பட்ட ஒன்று என்பது புலனாகின்றது.

இயேசுவின் உயிர்த்தெழுதலின் ஊடாகவும் சமூகத்தில் தரித்திரருக்கு ஓர் விடுதலை கிடைப்பதை அவதானிக்கலாம். மற்றவர்களுக்காக தன்னை தரித்திரராக்கி அவர்களின் விடுதலைக்காக மரணம் அடைந்த கிறிஸ்துவை, கட்டிவைக்க முடியவில்லை. தரித்திரரின் விடுதலைக்காகப் பாடுபட்ட இத்தலைவன் மூன்றாம் நாளில் உயிரோடு எழுகின்றான். இந்நிலை சமூகத்தில் தரித்திரருக்காகப் பாடுபடும் மக்களுக்கு ஓர் உற்சாகத்தைக் கொடுக்கின்றது. மற்றவர்களின் வாழ்வை உயர்த்துவதற்காக தங்களை அர்ப்பணிக்கும் மக்கள், மரித்தாலும் கல்லறை அவர்களைக் கட்டிவைக்கப்போவதில்லை. அவர்கள் உயிர்பெற்று எழுவார்கள், இதுவே தரித்திரருக்கும் தரித்திரத்தை அகற்றபாடுபடுபவர்களுக்கும் கிடைக்கும் நற்செய்தியாகும்.

**முடிவுரை:**

இயேசுவின் பிறப்பும் வாழ்வும் பணியும் மரணமும் உயிர்த்தெழுதலும், தரித்திரரின் நிலையை உயர்த்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஓர் சுற்றுவட்டம் போன்று காணப்படுகின்றது. இயேசு தன்னைத்தானே தரித்திரராக்கி தரித்திரரின் நிலையை உயர்த்தி அவர்களுக்குப் பெருமை சேர்த்தார். அவர் தரித்திரர்களோடு தன்மை அடையாளப்படுத்தி அவர்களுக்காகக் குரல் எழுப்பி அவர்களுக்காக மரித்து அவர்களுக்காகவே உயிர்த்தெழுந்தார். இந்த உண்மையின் அடிப்படையிலேயே தரித்திரர்களோடு அன்னை திரேசா, கட்சின் அம்மையார் ஆகியோர் தங்களை அடையாளப்படுத்தி, தரித்திரரின் வாழ்வை உயர்த்தினர். மாட்டின் லூதர்க் கிங், வில்லியம் வில்பபொஸ் போன்றவர்கள் தரித்திரரின் விடுதலைக்காகப் பாடுபட்டு அவர்களின் நிலையை உயர்த்துவதற்காக மரணத்தைத் தழுவினார்கள். இன்று ஏகாதிபத்தியவாதிகளான போர்த்துக் கேயர்களின் வருகையின் 500ஆவது ஆண்டை நாம் நினைந்து கொள்கின்றோம். இக்காலானித்துவ ஆட்சியின் போது எமது தேசத்திலுள்ள வளங்களின் பெரும் பகுதி அவர்களின் தேசத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. இதனால் நாம் இப்பொழுது தரித்திர நிலையை அடைந்துள்ளோம். மேலும் தற்போது மேலத்தேய உலகிலிருந்து வெளிவரும் உலகமயமாக்கல்ச் சிந்தனையினால் மக்களிடையே தேவையற்ற நுகர்வுக் கலாசாரம் உருவாகி அவர்களை தரித்திர நிலைக்குள் தள்ளியுள்ளது. முதலாளித்துவப் பொருளாதாரத்தின் அடிப்படையில் இலாப நோக்கம் மேலோங்கி சேவைநோக்கம் எம்மத்தியில் இருந்து அகன்றபடியினால் செல்வம் ஒரு சில மக்களிடத்தில் குவிக்கப்பட்டு வருமானப் பகிர்வில் சமத்துவம் அற்ற நிலையை உருவாக்கியுள்ளது. கூட்டுக் குடும்பங்களாகக் காணப்பட்ட குடும்பங்கள் சுயத்தின் அடிப்படையில் செயற்படுவதனால் உறவுகளில் தரித்திர நிலை எங்கள் மத்தியில் தோன்றியுள்ளது. மேலும் ஏற்றுமதி, இறக்குமதிப் பொருளாதாரமும், பிரித்தானியக் கல்விக்கொள்கையும் நிர்வாகக் கொள்கையும் எம்மத்தியில் வர்க்க

வேறுபாடுகளை உருவாக்கி,தரித்திர நிலையை சமூகத்தில் கட்டவிழ்த்துவிட்டுள்ளது. எனவே நாமும் சமூகத்தில் பலதரப்பட்ட நிலையிலுள்ள தரித்திர நிலையை அகற்றப் பாடுபடுவோமாக. இயேசு தரித்திரராகி எங்களுக்குப் பெருமை சேர்த்துத் தந்தது போல நாங்களும் விரும்பி தரித்திர நிலையை அடைந்து தரித்திரர்களுக்குப் பெருமையைச் சேர்த்துக் கொடுப்போமாக.

**வண. அ. ஸ்ரீபன்**

## நண்பனே இதைக் கவனி!

நீ
நோயுற்ற உன் மனதைக் கவனிக்க மாட்டாயா?
ஆழ் மனதில் வேரூன்றிப் போன
ஒரு துயரத்தைப் பிடுங்கிப் போடமாட்டாயா?
உன் மூளையில் எழுதப்பட்டுக் கிடக்கும்
துன்பவரிகளை அழித்து விடமாட்டாயா?
உன் இதயத்தை அழுத்திப் பிழிந்து கொண்டிருக்கும்
பயங்கர நினைவுகளை மாற்றக்கூடிய
ஓர் இனிய மருந்தை
உட்கொள்ளக்கூடாதா?

**நன்றி: ஷேக்ஸ்பியர்**
**"மாக்பெத்"**
**(மொழியாக்கம்: கலாநிதி அ. அல்போன்ஸ்)**

# ஏழைகளோடு நம்மை ஒன்றுபடுத்துவோம்

.......அவர் செல்வராயிருந்தும் உங்களுக்காக
ஏழையானார். அவருடைய ஏழ்மையினால்
நீங்கள் செல்வராகுமாறு இவ்வாறு செய்தார்.
(2 கொரி 8:9)

மானிட வாழ்க்கையில் எந்தவித வழியின்றி நிலையும்,வறுமையும் சமூகத்தின் தீமைகள் என்றே கூற தோன்றுகின்றது. ஏழ்மை, வறுமை என்னும் தன்மைகள் ஏற்பட பல காரணங்கள் இருக்கின்றன. குறிப்பாக பொருளாதாரத்தினால், அரசியலினால் கலாச்சாரம், சாதியம், சமயம் ஆதரிக்கும் தன்மை என பலநிலைகளில் இன்றைய உலகில் வறுமை அல்லது ஏழ்மை ஏற்படுவதனை பார்க்கின்றோம். இவ்வாறு ஒவ்வொரு விதத்திலும் வறுமை ஏற்பாட்டாலும் இவைகள் எல்லாம் ஒன்றில் ஒன்று தங்கியிருந்து தான் செயல்படுகின்றன, என்பதனையும் மறுக்கமுடியாது. நமது பொருளாதார வறுமை அந்த அரசியல் அமைப்புகளால் நிரந்தரமாக்கப்படுகின்றன. அதேபோல் கலாச்சார நிறுவன அமைப்புகளாகிய கல்வித்துறை, சமூகத்தொடர்புத்துறை போன்ற முதலாளித்துவத்தை ஆதரிக்கவும் பெரும் பொருளாதார நிறுவனங்களின் இலாபத்தை உயர்த்தவும் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறு தான் சமயக்கொள்கையின் பெயரால் சாதி நியாயப்படுத்தப்படுகிறது. இவற்றை எல்லாம் பார்க்கும்போது நாம் வறுமை, ஏழ்மை, என்பது தனிப் பொருளாதாரத்தில் மட்டுமல்ல அனைத்து விடயங்களிலும் இவ்நிலைப்பாடு காணப்படுகின்றது. இவ்வாறு ஏழைகள் என்னும் போது மனித மாண்போடு வாழ வாய்ப்பு மறுக்கப்பட்டவர்கள் உணவு, உறைவிடம் இன்றி ஒடுக்கப்பட்டவர்கள், சுதந்திரம் மறுக்கப்பட்டவர்கள், சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டவர் என பலரை உள்ளடக்கியதாக அமையும் இப்படிப்பட்டவர்களை கொண்ட குழுவினரைத்தான் இறைவாக்கினர் "எஞ்சியிருக்கும் ஒரு சிறு குழு" எனக் குறிப்பிடுகின்றனர். இக்குழுவே யாவே கடவுளுக்கு உண்மையாக இருந்து எதிர்கால இஸ்ரவேலராக மாறும்(ஏசா4:3, 6:13)

"எஞ்சியிருப்போர்" நடுவிலிருந்து மெசியா வருவார் என்றும் புதிய உடன்படிக்கையின் பலன்கள் கிடைக்கும் என்றும் கூறினார். (எரே 31:34-39) இவ்வாறு மெசியாவை எதிர்பார்த்தவர்கள் இந்த ஏழை கூட்டத்தினரே. இவ் குழுவினரின் எதிர்பார்ப்பை நிறைவு செய்தவராகவே இயேசு கிறிஸ்து வந்தார். இது குறித்து இரண்டாம் வத்திக்கான் சங்கம் தனது கருத்தை வைக்கின்றபோது,

கிறிஸ்து வறுமையிலும் துன்பத்திலுமே மீட்புப் பணியைச் செய்து முடித்தார். அதுபோல் மீட்பின் பலன்களை மனிதருக்கு வழங்க, திருச்சபையும் அதே பாதையில் அடியெடுத்து வைக்கவே அழைக்கப் பெறுகிறது. கடவுள் வடிவில் விளங்கிய இயேசுகிறிஸ்து தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். (பிலி 2:6) மேலும் அவர் செல்வராயிருந்தும் நமக்காக ஏழையானார். (2கொரி8:9) அதுபோல தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை ஆற்றத் திருச்சபை மனித உதவிகள் தேவைப்பட்ட போதிலும், மண்ணக மாட்சியைத் தேடுவதற்கென்று அது ஏற்பட்டதல்ல, மாறாக அகநிலை ஏழ்மைக்கும் தியாகத்துக்கும் எடுத்துக்காட்டாக விளங்கவும் அவற்றை அறிக்கையிடவுமே திருச்சபை உள்ளது. (திருச்சபை எண் 8)

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து செய்தபணியே இன்று திருச்சபைக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இன்று திருச்சபை கிறிஸ்துவின் பிறப்பை கொண்டாடுகின்றது என்றால் அவர் வந்த நோக்கம், பணி என்பவற்றை நிறைவேற்றுவதே ஆகும்.

கடவுளின் வாக்கு மனிதனார் என்ற செயல். அவர் மனுக்குலம் மீது வைத்திருந்த அன்பின் செயல்வடிவமே இதனைப் பற்றி பவுல் அடிகளார் கூறும் போது நாம் விடுதலை அடையவும், உரிமைவாழ்வு பெறவுமே கிறிஸ்து மனிதனார், உயிர்பெற்றெழுந்தார் (கலா5:1) மேலும் இயேசு தம்மை தாழ்த்திக் கொண்டு வெறுமையாக்கிய செயல். அவர் மனுகுலத்தின் மீது கொண்ட அன்பினாலும் அந்த நிலையில் துன்பப்படுகிறவர்களோடு ஒருங்கிணைய வேண்டும் என்பதினாலுமே மனுக்குலத்தில் உள்ள

ஏழை பணக்காரர், உடமை உடையோர் இல்லாதவர், ஒடுக்கப்படுவோர், ஒடுக்குவோர் என்ற பிளவுபடுத்தும் அனைத்து எதிர்த்திடலே அவர் வந்தார்.

இன்று ஏழைகளாக ஒடுக்கப்படுவோர், சமுதாயத்தின் விளிம்புக்குத் தள்ளப்பட்டோர், சுரண்டப்படுவோர், உரிமைகள் மறுக்கப்பட்டோர் சமுக அந்தஸது மறுக்கப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், அடிமைகள், சிறார் தொழிலாளர்கள் சுயநலகும்பல்காரரால் விபச்சாரம், பிச்சையெடுத்தல், போதைப்பொருள் கடத்துபவர்களாக இருப்பவர்கள் என பலரை குறிப்பிடலாம்.

எனவே வறுமையையும் மனுக்குலத்தை சிறுமைப்படுத்து பவற்றயையும் எதிர்த்துப் போராடும் போதுதான் நாம் ஏழைகளுடன் நம்மை ஒன்றுபடுத்த முடியும். இதனை செய்வதற்க்காகவே அன்று இயேசுகிறிஸ்து மனுவுரு ஏற்று மனுக்குலத்துடன் தன்மை ஒன்றுபடுத்தி போராடினார். இதன் மூலமே மெசியாவின் விடுதலை வெளிப்பட்டது.

நாம் ஏழைகளுக்காக பாடுபடுகின்றோம் என கூறலாம் அப்படியாயின் எம்மையே ஏழையாக்கி கொள்ளவேண்டும். இயேசு மெசியாவாக ஏழைகளுக்கு வந்தார். அவரும் ஏழையாகவே வந்தார். ஏழையாகவே வாழ்ந்தார். ஏழைகளுக்கு மேலாக இருந்து உதவி செய்யாமல் அவர்களுடன் நம்மை இணைத்துக் கொண்டு ஆண்டவரின் பிறப்பை கொண்டாடுவதே சிறப்பான செயலாக அமையும்.

“வறியவர்கள் தங்கள் இழிநிலையில் தொடர்ந்து இருப்பதற்கு அடிப்படையான காரணம் அவர்கள் அடக்கு முறையாளர்களின் அநீதிப் போக்கினாலும் அட்டூழியத்தினாலும் ஒடுக்கி நசுக்கப்படுவதே ஆகும்.”

சகோ. மா. ஜெயானந்தன்

இறுதியாண்டு மாணவன்

# கிறிஸ்து பிறப்பின் தனிச்சிறப்பு

வாழ்க்கையில் சில காரியங்கள் சிறப்புத் தன்மை வாய்ந்தவை. அதற்கு நிகர் அதுவே. கிறிஸ்து தரித்திரரானதும், அவரது தனிச்சிறப்பாகும். தனி மனிதனிடம் உள்ள கைகளில் இருப்பது போன்ற கைரேகைகள் இந்த உலகத்தில் வேறு எவரிடமும் இல்லை. அவை இவ்வுலகில் உள்ள 600 கோடி மக்களில் தனித்தன்மை வாய்ந்தவை. ஒரு மனிதனின் கைரேகை அம்மனிதனின் அடையாளங் காட்டும் மாற்ற முடியாத கையொப்பமாகும். மனிதன் வயதிலோ, தோற்றத்திலோ மாற்றமடையலாம் ஆனால் தனித்தன்மை பெற்ற மனிதரின் கைரேகைகள் மட்டும் மாற்ற மடைவதில்லை. அவைகளில் வளைவுகளும், கோடுகளும் இருக்கலாம். ஆனால் அவை உலகில் வேறு எவருடையதைப் போலவும் இருப்பதில்லை. அதற்கு நிகர் அதுவேயாகும். கிறிஸ்துவின் பிறப்பு தனித்தன்மை வாய்ந்தது. அது வரலாற்றில் வேறு எவருடைய பிறப்பைக் காட்டிலும் வித்தியாசமானது. அதற்கு நிகர் அதுவே.

கிறிஸ்து பிறப்பதற்கு 700 வருடங்களுக்கு முன்னர் உரைக்கப்பட்ட பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றுவதால் கிறிஸ்துவின் பிறப்பு தனிச்சிறப்புப் பெற்றது. (மத்தேயு 1:22-23) கிறிஸ்துவின் பிறப்பு மற்ற எல்லாருடைய பிறப்பைக் காட்டிலும் வித்தியாசமானது. இது பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாய் அமைந்தது.

ஒரு கன்னிகையினிடத்தில் பிறந்தபடியால் கிறிஸ்துவின் பிறப்பு தனித்தன்மை வாய்ந்தது. (மத் 1:18-20) கிறிஸ்துவின் பிறப்பின் இரகசியம் தெய்வீகத் தன்மையில் அமைந்துள்ளது. பூமிக்குமேல் வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அந்த அளவு அவருடைய வழிகளும் நம்முடைய வழிகளை விட உயர்ந்தவை. இயேசு தரித்திரரானதற்கு ஒரு வகையான வல்லமைதான் உண்டு. அதுவே "மனுஷ சக்திக்கு அப்பாற்பட்ட தெய்வீக வல்லமை"

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே! அவர் ஐசுவரிய முளம்வராயிருந்தும் நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே' (2 கொரி 8:9)

சிருஷ்டி கர்த்தாவான கடவுள்தாமே இளம் பருவத்திய கன்னிமரியாளின் கர்ப்பத்திலிருந்து குழந்தை இயேசுவாகப் பிறந்த வேளையை பரி. லூக்கா, ஆசிரியர் விவரித்திருப்பதைக் மிக ஆழமாக வாசிக்கும் போது எவருக்கும் கண் கலங்காமல் இருக்க முடியாது.

"அவள் தன் முதற் பேறான குமாரனைப் பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்த படியினால் பிள்ளையைத் துணிகளில் சுற்றி முன்னணையிலே கிடத்தினாள்". (லூக்கா 2:7)

கிறிஸ்துவின் பிறப்பின் (முதல் கிறிஸ்மஸ்) வேளையில் அதில் பங்கு கொண்டவர்களுக்கு எவ்வளவு திகைப்பும், தடுமாற்றமும், சஞ்சலமும் பொங்கி எழும்பியிருக்கும் என்று யூகித்துக் கொள்ளலாம். அண்ட சராசரங்களை படைத்த பராபரனுக்கு சத்திரத்திலே இடமில்லை, கிடைத்த இடம் மாட்டுத் தொழுவம், படுப்பதற்கு வைக்கோல் தான்! இயேசு சுற்றப்பட்டது சாதாரண துணியில் (லூக்கா 2:7) தொட்டிலோ மாட்டுத் தீனி வைக்கும் தொட்டிலில் தான் இயேசு பாலகன் பிறந்தார்.

இம்மானுவேல் உலகத்தில் பிரவேசித்தது ஒரு தரித்திரராய் மாட்டுத் தொழுவத்தில்தான் கடவுளுடைய ஓரே செல்வக் குமாரன், பிரபஞ்சத்தை உண்டாக்கியவர் யூதர்களின் இராஜா. உலக இரட்சகர் சமாதானப் பிரபு, ஏன் இந்த சிறு குழந்தையும், இவ்வித அழுக்கிலும் நாற்றத்திலும் பிறக்க வேண்டும். குழந்தை இயேசுவைத் தாலாட்டிய தாயாகிய மரியாள் பாடியதாக பக்தன் ஒருவன் பாடினான்.

"ஏதுக்கழுகிறாய் நீ ! ஏழை மாது என்ன செய்வேன்?
கூதலடிக்கிறதோ, பாலா, குளிரும் பொறுக்கலையோ?
தந்தைக்கு தச்சுவேலை, உன் தாயும் எளியவளே?
இந்த மா சங்கடத்தில் பாலா என்ன பெருமையுண்டு?

இல்லாத ஏழைகட்கு இன்பம் எல்லாம் கொடுக்க வந்த
செல்வமே நீரழுதால், இந்தப் பாரும் சிரியாதோ?"

நம் போன்ற தரித்திரருக்கு வாழ்வளிக்க, அவர் தாமே தரித்திரத்தை அனுபவித்தார்.

## தரித்திரர் யார்?

தரித்திரர் என்ற வார்த்தைக்கு பணமில்லாதவர்கள், பொருள் இல்லாதவர்கள், வீடு வசதியில்லாதவர்கள் என்றே கருதுகிறோம். ஏழை மக்கள் தேவை உள்ள மக்கள் தான் தரித்திரர். தரித்திரர் என்ற வார்த்தைக்கு தேவை உள்ளவர்கள் என்பதே சரியான அர்த்தமாய் இருக்கிறது. அது ஆவிக்குரிய தேவையானாலும் சரி, உலகப் பிரகாரமான தேவையானாலும் சரி, அல்லது சரீரப் பிரகாரமான தேவையானாலும் சரி, ஆவியில் எளிமையுடையோர் பேறுபெற்றோர் என இயேசு குறிப்பிடுகிறார். எளிமை என்பது ஒன்றுமில்லாதவன், ஏழை, தனக்கு என்று ஒன்றுமே இல்லாதவன்.

## இயேசு ஏன் தரித்திரரானார்?

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வரலாற்றில் ஒரு மனிதன் தரித்திரனாக உருவெடுத்தார், மற்ற எந்த நபரையும் போலவே அவரும் இந்த உலகத்தில் பிறந்து முழு மனிதனாக வளர்ச்சியடைந்தார். ஒரு சிறப்பான நோக்கத்திற்காக இயேசு தரித்திரரானார்.

1. சாத்தானின் சக்தியிலிருந்து மீட்பதற்காக................."

   "இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் தரித்திரரானார்.(லூக்கா 19:10)
2. நம்மை மீட்கும் பொருளாகத் தமது ஜீவனைக் கொடுப்பதற்காக "மனுஷகுமாரனும் ஊழியங் கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும் அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்." (மத்தேயு 20:28)
3. நமது வாழ்க்கையில் சாத்தானின் கிரியைகளை அழிப்பதற்காக ......................"பாவஞ் செய்கிறவன்

பிசாசினாலுண்டாயிருக்கிறான் ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ் செய்கிறான்.!

"பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்."

4. நமக்கு நித்திய ஜீவனை அளிப்பதற்காக...................... தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார். அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்த சாட்சியம்.

5. கடவுள் எப்படிப்பட்டவர் என்பதை நமக்குக் காண்பிப்பதற்காக இயேசு வந்தார். இயேசுவை அறிந்தால் பிதாவை அறியலாம். இதுமுதல் அவரை அறிந்தும் அவரைக் கண்டும் இருக்கிறீர்கள். இயேசுவைக் கண்டவன் பிதாவைக் கண்டான்.

## கடவுள் மனிதனை இரட்சிக்க தரித்திரரானார்.

இயேசுவானவர் ஒரு தரித்திரராக வந்தார், அதிலும் அவருக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பு, மகா மேன்மையானது. நித்திய அழிவுக்கென்று நியமிக்கப்பட்ட மனுக்குலத்தை மீட்கும் பணி அது. அதாவது நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் ஒருவராகச் சுமக்க வேண்டும். அப்படியே தமது கடவுள் தன்மையை மறந்தவராய் ஒரு முழு மனிதனாய், இயேசுவானார். ஒரு தரித்திரரானார். அதிலும் தமது மகிமையையெல்லாம் விட்டு மேன்மைகளை இழந்து ஒரு கன்னிப்பெண் வயிற்றிலே உதித்து, ஒரு சாதாரண ஏழைக் குழந்தையாகப் பிறந்து, ஒரு மாட்டுத் தொழுவத்திலே படுத்திருந்ததை நமது மனித அறிவினாலே அளவிடவே முடியாது. உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி கடவுள் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல் அவராலே உலகம் இரட்சிக்கப் படுவதற்காகவே அவரை தரித்திரராக அனுப்பினார்.- (யோவா 3:17)

## அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பில்லை

அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்கு சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து

மனுஷசாயலானார்! அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தம் கீழ்ப்படிந்தவராகி தம்மைத் தாமே தாழ்த்தினார்.

ஆதி மனிதன் ஆதாம் தான் கடவுளாக வேண்டும் என்று விரும்பி கடவுளின் கட்டளையை மீறி விலக்கப்பட்ட மரத்தின் கனியைத் தின்று மரணத்தை ஏற்றுக் கொண்டான். கடவுள் சாயலை இழந்தான். இப்படிப்பட்ட மனிதனை மீட்க கடவுள் தம்மைத் தாழ்த்தி தரித்திரரானார். இயேசு என்றால் மனிதரின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிக்கிறவர் என்று அர்த்தம். இயேசு இரத்தத்தைச் சிந்தி மனுக்குலத்தை மீட்டுக் கொண்டார்.

**நமது ஐசுவரியம்**

ஐசுவரியம் என்றால் "ஒருவருக்குச் சொந்தமான திரண்ட ஆஸ்தி" என்றும் உலகில் மனிதர்கள் சொந்தமாக்கிக் கொள் விரும்பும் பொருட்களின் திரட்சி" என்றும் அகராதி விளக்கமளிக்கிறது. உலகப் பிரகாரமான பொருட்களும் வீடுகள், கார்கள், நிலங்கள், பெருந்தோட்டங்கள் போன்ற ஏராளமானவை ஒருவருக்குக் குவிந்திருந்தால் அவரை ஐசுவரியவான் என்கிறோம். ஐசுவரியம் என்பது ஒருவருக்கு எத்தனை கார்கள் உள்ளன? வீடும் வளவும் எத்தனை பரப்பளவு உள்ளது? ஆகியவற்றைப் பொறுத்துள்ளது.

கடவுள் நமக்கு தந்திருக்கின்ற அனைத்து கிருபை வரங்களும் சேர்ந்ததே நமது ஐசுவரியம் ஆகும். ஆதியாகமம் 13ஆம் அதிகாரத்தில் ஆபிரகாமின் காலத்தில் ஆஸ்தி என்பது ஒருவனுக்கிருந்த ஆடுகள், மாடுகள், ஒட்டகங்கள் என்பவற்றின் எண்ணிக்கையைப் பொறுத்திருந்தது. அதன் பின்னர் ஒரு மனிதன் சொந்தமாக பெற்றிருந்த நிலத்தின் பரப்பளவு அவனுடைய ஆஸ்தியின் அளவை நிர்ணயித்தது.(யோவா 17) இன்று நாம் பெற்றிருக்கின்ற எல்லா வகையான உடமைகளும் அதாவது கணனி இயந்திரங்கள், தான்னியங்கி வாகனங்கள், கார், வேன், லொறி, பஸ், விளையாட்டுக் கருவிகள், செல்போன், வங்கிப் பண இருப்பு,

கட்டடங்கள், தோட்டங்கள் போன்ற இவையனைத்தும் ஆஸ்தியும் சம்பத்தும் ஆகும்.

**ஐசுவரியம் அனைத்தும் கடவுளுக்குச் சொந்தம்**

நமது ஐசுவரியம் கடவுளுடைய ஈவு என்று நாம் புரிந்து கொண்டால், அவையனைத்தும் கடவுளிடம் இருந்து வருகின்றன. கிடைக்கின்றன, எனவே அவையனைத்தும் அவருக்கே சொந்தம். சங்கீதம் 104:24இல் “பூமி உம்முடைய பொருள்களினால் நிறைந்திருக்கிறது” என்றும் 1 நாளாகமம் 29:11, இல் “கர்த்தாவே மாட்சிமையும், வல்லமையும், மகிமையும், ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள், வானத்திலும், பூமியிலும், உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள். கர்த்தாவே இராஜ்யமும் உம்முடையது. தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர்” என்று வாசிக்கிறோம். ஆகாய் 2:8இல் “வெள்ளியும் என்னுடையது, பொன்னும் என்னுடையது, என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்” என்று பார்க்கிறோம்.

**இயேசுவா? ஐசுவரியமா?**

நம்முடைய ஐசுவரியம் நமக்கு சொந்தமானது என்று நாம் நினைக்கும் போது, நாம் நமக்கே துன்பத்தை வரவழைத்துக் கொள்கிறோம். ஒரு வாலிபன் இயேசுவை புறக்கணித்து தன்னுடைய ஆஸ்தியைத் தெரிந்துக் கொண்டு மனமடிந்து, துக்கத்தோடே போய் விட்டான். அவர் வரும் போது நன்றாகத்தான் வந்தான். இயேசுவை “நல்ல போதகரே” என்று அழைத்தான். நித்திய ஜீவனை சுதந்தரிப்பதற்கு நான் செய்ய வேண்டுமென்று சத்தியத்தை அறிய விரும்பினான். ஆனால் இயேசுவை பின்பற்றுவதற்கு அவனுடைய ஐசுவரியம் குறுக்கே நின்றது.

ஒருவேளை இயேசுவை தெரிந்து கொண்டிருந்தால் ஒரு அப்போஸ்தலனாக வல்லமையான ஊழியக்காரனாய் விளங்கியிருப்பான். பரலோகத்தில் மிகுந்த பொக்கிஷத்தை சேர்த்து வைத்திருப்பான். அப்பொழுது இயேசு “ஐசுவரியவான் தேவனுடைய

இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும் ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்றார். (மாற்கு 10:25)

**லாசரு என்னும் தரித்திரன்**

"லாசரு என்னும் பேர் கொண்ட ஒரு தரித்திரனும் இருந்தான். அவன் பருக்கள் நிறைந்தவனாய் அந்த ஜசுவரியவானுடைய வாசலருகே கிடந்து அவனுடைய மேசையிலிருந்து விழுந்துணிக்கைகளினாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்" (லூக்கா 16:20)

ஜசுவரிய வாழ்க்கையே ஆசீர்வாதமான வாழ்க்கை என்றும் தரித்திர வாழ்க்கை சாபமானது என்றும் பொதுவாக மக்கள் எண்ணுவதுண்டு. உலகத்தில் ஜசுவரியமான வாழ்க்கையை வாழ்ந்தவன் பாதாளத்தில் வேதனையை அனுபவிப்பதை பார்க்கும் போது ஜசுவரிய வாழ்க்கைதான் ஆசீர்வாதம் என்று சொல்வதற்கில்லை என்பது எமக்குப் புலனாகிறது. லாசரு தேற்றப்படுவதற்கு அவன் தரித்திரனாய் இருந்ததல்ல காரணம் அல்லது பருக்கள் நிறைந்த வியாதிக் காரனாய் இருந்தும் காரணமல்ல, இருக்க வீடில்லாமல் ஜசுவரியவான் வீட்டின் வாசலில் இருந்ததும் உண்ண உணவில்லாமல் அவன் மேசையிலிருந்து விழும் துணிக்கையினால் தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்ததும் காரணமல்ல. இந்த எல்லா சூழ்நிலையிலும் அவன் தேவனை நம்பி முறுமுறுப்பில்லாமல் வாழ்ந்து விசுவாசத்துடன் தன் ஓட்டத்தை ஓடி முடித்ததே அந்த ஆசீர்வாதத்திற்குக் காரணமாகும்.

**ஜசுவரியத்தாலும். தரித்திரத்தாலும் வாழ்வுக்கு பாதகம்**

ஜசுவரியம் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு கண்ணியாகவும் தரித்திரம் ஆவிக்குரிய வாழ்வைக் கலங்கப் பண்ணக் கூடியதாகவும் இருக்கிறது. இவ்விதமாக ஜசுவரியத்தாலும் தரித்திரத்தாலும் ஆவிக்குரிய வாழ்வுக்கு பாதகம் வரலாமென்பதால் அதனை அறிந்த சாலொமோன் அன்று செய்த விண்ணப்பத்தையே நாம் ஒவ்வொருவரும் இன்றும் செய்ய வேண்டியுள்ளது.

"இரண்டு மனு உம்மிடத்தில் கேட்கிறேன்: நான் மரிக்கும் பரியந்தமும் அவைகளை எனக்கு மறுக்காமல் தாரும் (நீதி 30:7) சலொமோனுடைய இவ்விண்ணப்பத்தில் இரண்டு வேண்டுகோள்கள் உள்ளன. அதில் ஒன்று இந்த ஐசுவரியத்தையும் தரித்திரத்தையும் பற்றியதாகும்." நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து, கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கும் தரித்திரப்படுகிறதினால் திருடி தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கும், என் படியை எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும்" ஐசுவரியம் தன் வாழ்க்கைக்கு ஒரு கண்ணியாக இருப்பதை சாலொமோன் தன் அனுபவத்தில் நன்கு அறிந்திருந்தான். ஏனெனில் ஐசுவரியம் மனிதனைக் கர்த்தரை விட்டுத் தூரமாகக் கொண்டு செல்லக் கூடியது. அவ்விதம் ஐசுவரியம் எம்மை கர்த்தரை மறுதலிக்கப் பண்ணி கர்த்தர் யார் என்று கேட்கவும் வைக்கக் கூடியது என்பதையும் சாலொமொன் நன்கு அறிந்திருந்தார்.

## முடிவுரை

ஒரு மனிதன் தரித்திரனாகவோ, பணக்காரனாகவோ இருப்பதல்ல, ஆசீர்வாதம் எந்நிலையிலிருந்தாலும் எவ்விதம் வாழ்கின்றோம் என்பதே அவசியமானதாகும். ஐசுவரியவானாயிருந்து பாதாளத்திற்கு போனவன் போல தரித்திரனாயிருந்து போனவனும் உண்டு, தரித்திரமோ ஐசுவரியமோ நம் வாழ்க்கைக்கு ஆசீர்வாதமல்ல, ஐசுவரியத்திலும் தரித்திரத்திலும் ஆண்டவருக்காக வாழ்ந்து கர்த்தரை மகிமைப்படுத்துவதே ஆசீர்வாதமாகும். சகேயு தான் அநியாயமாய் வாங்கின பணம், ஆஸ்தி எல்லாவற்றையும் ஏழைகளுக்கு விற்றுக் கொடுத்துவிட்டு அநியாயமாய் வாங்கினதை நான்கு மடங்கு திருப்பிக் கொடுத்து விட்டு இயேசுவை பின்பற்ற தீர்மானித்தார். நாமும் தரித்திரராக இவ்பூவுலகில் நம் மீட்புக்காக வந்த கிறிஸ்துவாகிய நல்ல பங்கை தெரிந்து கொள்வோம். எங்களுடைய ஐசுவரியத்தை பரலோகத்தில் சேர்த்து வைப்போம்.

வண. G. நடராஜா

# அவரின் ஏழ்மையால் நாம் பெற்ற செல்வம்

ஓர் தனித்தன்மையான வாழ்வு –
ஓர் தீவனத் தொட்டியில் அவர் பிறந்தார்
ஓர் மரக் கூடத்தில் வளர்ந்தார்.
அவருக்கு எந்தப் பதவித் தகமையும் இல்லை.
அவருக்குச் சொந்த வீடு இல்லை.
எந்தக் கல்லூரியிலும் அவர் பயிலவில்லை.
எப் புகழையும் அவர் தமதாக்கவில்லை.
பல்லாயிரம் ஆண்டுகள் தோன்றி மறைந்தன – ஆயினும் இன்றும்
பாரில் மனித இனத்தின் மையம் அவரே....

## சொல் விளக்கம்

ஐஸ்வரியம் தரித்திரம் என்ற வடமொழிச் சொற்களுக்கு செல்வம், மற்றும் ஏழ்மை அல்லது வறுமை எனத் தமிழ் பொருள் கொள்ளலாம். ஆங்கிலத்தில் இதற்கு இணையான பதமாக Poor or poverty என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. இதற்கு இணையான பல எபிரேய வடிவங்கள் ஏழை எளியவர் போன்ற கருத்து வடிவங்களுடன் எளியோர், வறியோர் சிறுமையானனோர் வெறுமையானோர் எனப் பல வடிவங்களிலும் கையாளப்படுகின்றது. இச் சொல்லாக்கம் கிரேக்கத்தில் (Ptochos) புடோக்கொல் எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## முன்னுரை

இஸ்ரயேலின் இறைவன் தன்னை முதலாம் ஏற்பாட்டிலே வெளிப்படுத்திய பொழுது சகல சக்திகளையும் கொண்ட சர்வ வல்லவராகக் காணப்பட்டாலும் அவரின் செயல்பாட்டுப் பண்புகளால் அவர் அடிமைகளின் கடவுளாகவே (God of slaves) சித்தரிக்கப்படுகின்றார். அத்தோடு தனது சக்திமிக்க சர்வ வல்ல உயரில் செல்வாக்கான நிலையினின்று இறங்கி தன் செல்வங்களை இழந்து தான் படைத்த மனிதருடன் சமநிலையில் உடன்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டார்.

தன் மூச்சுக் காற்று மற்றும் தன் சாயலை மனிதருக்குக் கொடுத்து தான் படைத்த உலகச் செல்வங்கள் அனைத்திற்கும் கூட்டுப் படைப்பாளியாக்கி மனிதனுக்கு அவற்றிற்குப் பெயரிடும் உரிமையையும் தாரை – வார்த்துக் கொடுத்தார். (தொடக்க நூல் 2:19-21)

இறைவனின் ஏழ்மை என்ற கருத்தாக்கம் படைப்பின் போதே எம்மைச் செல்வராக்கும் செயல்பாடாகவே அமைந்தமை முதல் ஏற்பாடு காட்டி நிற்கும் உண்மையாகும் (தொடக்க நூல் 1:28)

இவ்வாறே மீண்டும் இரண்டாம் ஏற்பாட்டில் வரலாற்றுக்குட்பட்டு தன் ஏழ்மையால் எம்மைச் செல்வம் சிறக்கச் செய்தார். தன் ஒரே பேறான திருமைந்தனை மீட்பிற்காக உலகிற்கு அனுப்பி உலகத்தின் மக்கள் மீது தாம் கொண்ட நிலையான அன்பை நிறைவாக்கினார். இறைவன் தமது நிறைவை இழந்து அதை எமக்கு அளித்து எம்மைச் செல்வராக்கினார்.

**இவரது நிறைவிலிருந்து நாம் யாவரும்**
**நிறைவாக அருள் பெற்றுள்ளோம் (யோவான் 1:16)**

மனித வரலாற்றில் இஸ்ரயேல் மக்கள் தொடர் அடிமைத்தனங்களால் துவண்டு சோர்ந்த நிலையில் மேசியா என்ற ஈசாயின் அடிமரம் துளிர்த்தது. இயேசுக் கிறிஸ்துவின் ஏழ்மையின் ஊன்உடல் ஏற்பால், நிறை வாழ்வால் மீட்பு அளித்து எம்மைச் செல்வராக்கி, இறையரசின் அடிப்படையான விழுமியமாக களம் கண்டது. இது இயேசுக் கிறிஸ்துவின் பிறப்பால் முளை கொண்டு துளிர்ந்து ஏழை எளியவர்களுடன் கொண்ட உறவு வாழ்வின் பயனாக நீதி அற்ற உண்மையற்ற அரசியல் சமய,வர்க்க வேறுபாடுகளால் ஏற்பட்ட முரண்பாடுகளின் போராட்டமாகப் பரிணமித்து பாடுகளை ஏற்று, சிலுவை மரத்தில் மரணத்தை வென்று, அது வாழ்வின் முடிவல்ல என்ற நம்பிக்கை தரும் உயிர்ப்பாக உறுதி பெற்று மலர்ந்தது. அதனை அடுத்துப் பரமேறிப் போன பின்னும் தூயாவியர் மூலம் மற்றவரை செல்வராக்கும் நிறைவாழ்வு எனத் தொடர்ந்தது.

அவர் தம் செல்வத்தை இழந்து ஏழையாகி விளிம்பு நிலையில் உள்ளோர், ஒடுக்கப்பட்டோர், சமூகத்தில் முகமிழந்தோர், என மேலாதிக்க அதிகார வர்க்கத்தின் துரைத்தனங்களால் நசுக்கப்பட்டோர் போன்றவர்களுக்காய் சமூக சமய அரசியல் பொருளாதார நிலையில் வறுமைப்பட்டோரின் தன்மையைத் தரித்தார். அவரின் ஏழ்மையால் நாம் செல்வம் பெற்றோம்.

"கடவுள் வடிவில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாய் இருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். சாவை ஏற்கும் அளவுக்கு அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்கு கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார்." (பிலிப்பியர் 2:7-8)

அவர் ஏழ்மையால் தாம் பெற்ற செல்வத்தின் நிறை மகிழ் அனுபவத்தை தம் வாழ்வில் பவுலடியார் முழுமையாக உணர்ந்திருந்தார். பவுல் அடியார் அக்கால சூழலின் சுரண்டும் பொருளாதார அமைப்பால் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட்டு மனிதர்கள் அடிமைகள் ஆக்கப்பட்டதையும், மீட்டவர்கள் செல்வத்தால் இந்த அடிமைகள் மீட்கப்பட்டு நிறைவாழ்வு அடைந்த அனுபவத்தில் இறைமகன் இயேசுக் கிறிஸ்துவின் வருகையைப் புரிந்து கொண்டார். மிகச் சிறப்பான உணர்வுடன் அதைத் தன் சூழல் சார்ந்து முன் வைக்கிறார்.

### 01 வெறுமை குறித்த இயற்கை காட்டும் சிந்தனை

தாவோ தத்துவங்களின் அடிப்படையில் ஏழ்மை இன்மை வெறுமை என்பன எளிமையைக் குறிக்க காணலாம். நிறைவு செல்வம் என்பது கர்வத்தையும் ஆணவத்தையும் குறிக்கும்.

இந்த இன்மை வெறுமை என்பவற்றால்தான் நாம் வாழ்வடைகிறோம். பிரபஞ்சத்தின் பயன்கூட வெறுமையினால் தான் கிடைக்கிறது.

ஓ! காற்றுத் துருத்தியைப்
போலல்லவா இருக்கிறது.

பிரபஞ்சம் !

காலியா!

ஆனால் தடையில்லாமல் அல்லவா
தந்து கொண்டிருக்கிறது.

துருத்தி கண்ட கண்ட பொருட்களால் நிரம்பி இருந்தால் பயனற்றதாகி விடும். துருத்தி வெறுமையாக இருப்பதால் தான் காற்றை வழங்க முடிகின்றது. இத்தத்துவத்தை உலகைப் படைத்தவன் படைப்பிலேயே அடக்கியிருப்பது புதுமையாகத் தோன்றுகிறதல்லவா? ஒன்றின் வெறுமை தான் இன்னொன்றை நிறைவாக்க முடியும். ஒருவரின் ஏழ்மைதான் மற்றொருவரைச் செல்வராக்க முடியும். இத்தத்துவத்தின் முழுமை படைப்பாளர் படைப்புகளுடன் இணைந்து வார்த்தை ஊனுடல் ஏற்று மாமிசமாகிய நிகழ்வில் நிறைவடைகின்றதை யோவான் 1ம் அதிகாரத்தில் காணலாம்.

முட்டாளாகத் தோற்றமளிப்பதில் உள்ள அறிவை பலவீனத்தின் கருத்தியலில் காணப்படும் பலத்தை தோல்வி போல் காணப்படுவதன் வெற்றியை தாழ்மை பணிவின் உயர்வை வெறுமையின் நிறைவை ஏழ்மையின் செல்வத்தை சிறப்பாகக் காட்டி நிற்கிறது. தாவோவின் அடிப்படைத் தத்துவம்.

கிறிஸ்து இயேசுவின் குழந்தை பிராய வர்ணனை வரலாற்றை எழுதிய நற்செய்தி நூல்களின் ஆசிரியர்கள் இச் சிறப்பியல்புகளைப் புரிந்து கொண்டவர்களாய் அவற்றை அமைத்துத் தருவது சிறப்பான வெளிப்பாடாகும்.

அவரின் பிறப்பின் தாழ்நிலை
தொடர்ந்த அகதி வாழ்வு
பிறப்பின் செய்தி இடையருக்கு அறிவிப்பு,
கழுதை மேல் எருசலேம் நோக்கிய பவனி,
பாமரர் முகமிழந்தோர் தொழுநோயாளர், விபச்சாரிகள் என சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டோருடன் வாழ்வு,
பாவிகளில் பரிவு நோயுற்றவரில் மனதுருக்கம்.
பட்டினியால் இருந்தோர், பசியுற்றோர் மீது பரிதவிப்பு,
திக்கற்றவர்களின் காப்பரண் ஆகி – அவர்கள்

விடியலின் குரலாய் சிலுவை மரத்தில் மரணம்.

இப்படிப்பட்டவராக இறைவனின் ஏழ்மையை முழுவதுமாக வாழ்வின் செயல் ஆக்கத்தில் பிரதிபலித்ததுடன் இவ்வுலகின் ஏழ்மையின் சகல நிலைகளில் உழன்றோரையும், செல்வராக்கும் இறையரசின் விழுமியத்தை கிறிஸ்து நடைமுறைப்படுத்தினார். இறைவனின் உன்னத திருவுளத் திட்டமான மீட்பு செயல்பாட்டை நிறைவாக்கினார்.

## 02 ஏழ்மையாக்கத்தை ஏற்ற இயேசுக் கிறஸ்துவின் வாழ்வியல்

காரிருளில் நடந்து வந்த மக்கள், பேரொளியைக் கண்டார்கள்,
சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல்
சுடர் ஒளி உதித்துள்ளது (ஏசாயா 9:2)

இயேசுக் கிறிஸ்து மனமாற்றத்திற்கான விண்ணரசின் நற்செய்தியை அறிவிக்கத் தொடங்கிய போது ஏசாயா தீர்க்கனின் தீர்க்க தரிசனம் முழுமையாக நிறைவேற்றப் பெற்றது. (மத்தேயு 4:16)

இயேசுக் கிறிஸ்து தன் வெறுமையாக்கும் அடிமைப்பணி தொடங்கிய போது இறையரசின் முன்னோடி வாழ்வியல் கருத்தாக்கமாக நாசரேத்தூர்ப் பிரகடனத்தை முன் வைத்தார்.

"ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது
ஏனெனில், அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார்.
ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும் சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும், ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்".
(லூக்கா 4:18-19)

இந்த ஆண்டவர் அருள்தரும் ஆண்டு குறித்த செய்தி ஏசாயா 61:1-3இல் உள்ளது. இந்த விடுதலையின் பிரகடனத்தை

முழங்கி, இந் நற்செய்திக்குச் செயல் வடிவம் தன் வாழ்வால் வழங்கினார் கிறிஸ்து.

இந்த ஏழ்மையின் நிறை அனுபவத்தை முழுமையாக்கும் பணியில் கிறிஸ்து தன் குறுகிய வாழ்வு, பணிக்காலத்தில் ஈடுபட்டார்.

இறைமகன் குழந்தையாக வடிவம் பெற்று வரலாற்றில் செயல்பட்ட சூழல் மிகவும் கடுமையானது. உரோமரின் ஏகாதிபத்திய ஆட்சி அதனோடு இணைந்து அதிகாரத்தை தம் செல்வாக்கையும் தக்கவைக்க முயன்ற சதுசேயர், சமயத் தலைவர்கள் அதிகார சமயவெறி மோசேயின் விடுதலைக்கான சட்டங்களை, மக்களை அடிமைப்படுத்தவும் சுரண்டவும் தம் சுயநலத்திற்காகப் பயன்படுத்திய பரிசேயர் இவர்களின் மத்தியில் ஏரோதின் அரசாட்சி வெறியின் உச்சத்தில் அடிமைகளின் அரசனான இயேசுக் கிறிஸ்துவை மனுமகனாக இறைவன் உலகிற்கு அனுப்பினார்.

"இந் நேரம் வந்த ஏன்? ஐயா
என் ஐயா சாமி
இந் நேரம் வந்த ஏன்? ஐயா
மாடமாளிகை இல்லையோ – நீர்
தெய்வீகமாய் வந்து பிறக்க வில்லையோ.........

தனது தெய்வீகத்தை இழந்த ஏழையாகி இறைவன் தன் செல்வத்தை எமக்கு அளித்தார் என எளிமையான இறைமகன் பிறப்பை வியந்து பாடல் புனைகிறார் கவிஞர்.

தேவகுமாரன் மனிதன் ஆனார் – மக்களைத்
தேவகுமாரர் ஆக்குவதற்காய் என்பதே திருமறை கூறும் கருத்தாக்கமாகும்.

**03 ஏழ்மையாக்கத்தின் சில மாற்றுச் சிந்தனைகள்.**

"பூச்சியத்திற்குள்ளே ஒரு இராச்சியத்தை ஆண்டு கொண்டு புரியாமலே இருப்பான் ஒருவன் -அவனைப் புரிந்து கொண்டால் அவனே இறைவன்" - கவிஞர் கண்ணதாசன்

இங்கு இறைவனின் வெறுமையைப் புரிந்து கொண்ட சிறப்பு தென்படுகின்றது. இந்து சமயத்தில் "நான்" என்ற அகங்காரத்தை அகற்றுவதன் மூலம் எம்மை வெறுமையாக்கி இறைவனை அடைய முடியும் என்ற சிந்தனை ஓட்டம் காணப்படுகின்றது. ஜீவாத்மா அறியாமை என்ற "அவித்யா" நீங்கப் பெற்று பரமாத்மா நிலையடைகிறது. தான் தோன்றிய ஒளியுடனே இரண்டறக் கலக்கின்றது என்கிறது அத்வைதம்.

இதை மற்றொரு வடிவில் பௌத்த நெறி முன்வைக்கின்றது. எல்லாத் துக்கத்திற்கும் கவலைக்கும் காரணம் ஆசை. எனவே ஆசையை அகற்றி துக்கத்தை நீக்கி, அதன் மூலம் உள்ளொளி பெற பௌத்தம் அறை கூவல் விடுக்கின்றது. வறுமை, ஏழ்மையை ஏற்பதன் மூலம் எளிய வாழ்வு வாழ்ந்து உள்ளொளி பெற்று பரிநிர்வாணம் அடைய வழிகாட்டி அழைக்கிறது.

இவை எல்லாவற்றிற்கும் மகுடமாக ஏழ்மையாக்கல் சிந்தனை இறைவனின் திருவுளத்தை பூமியில் வெளிப்படுத்திய கிறிஸ்துவின் வாழ்வால் முழுமையான வடிவமாகச் செயலாக்கம் பெற்றது. இக்கருத்தாக்கம் காந்திய சிந்தனைகளிலும் ஊடுருவியுள்ளமை தெளிவு.

**முடிவுரை**

இங்கு அவர் ஏழ்மை என்பது பலவற்றைக் சுட்டி நிற்கின்றது. இதைப் பணம், செல்வம், என்று மட்டுமோ அல்லது ஆன்மீகம், ஆன்மீகச் செல்வம் என மட்டுமோ எனக் கருத முடியாது.

இந்த ஏழ்மை என்பது நாம் இழப்பதால் பெற்றுச் கொள்வதைக் குறிக்கும். இறையரசின் விழுமியங்களுக்காக ஆன்மீக செல்வம் பொருட்செல்வம், அதிகார பலம் பொருந்திய சுபீட்சமான வாழ்வு மற்றும் எம்மிடமுள்ள அறிவுச் செல்வம் எமக்கு கிடைத்த வாழ்வின் நேரம் அனைத்தையும் நாம் இழக்கத் தயாராக வேண்டும்.

நாங்களோ மதிப்பற்றவர்கள் இந்நேரம் வரை பட்டினியோடும், தாகத்தோடும் ஆடையின்றியும் இருக்கிறோம். அடிக்கப்படுகிறோம் நாடோடிகளாய் இருக்கிறோம் எங்கள் கைகளால் பாடுபட்டு உழைக்கிறோம், பழிக்கப்படும் போது ஆசி கூறுகிறோம், துன்புறுத்தப்படும் போது பொறுத்துக் கொள்ளுகிறோம். அவமதிக்கப்படும் போதும் கனிவாகப் பேசுகிறோம், நாங்கள்

உலகத்தின் குப்பை போலானோம். இதுவரை அனைத்திலும் கழிவுப்பொருட்கள் எனக் கருதப்பட்டு வருகிறோம். (1 கொரி 4:11-14)

இறைமையின் ஏழ்மையை முழுமையாக அனுபவத்தில் புரிந்து கொண்ட பவுல் அடியார் தானும் அந்நிலையை ஏற்கின்ற தன்மையை இங்கு காணலாம்.

அதிகாரம் அந்தஸ்து எல்லாவற்றையும் மக்களைத் தம்மோடு இணைக்க வேண்டும் என்பதற்காக இழந்து ஏழ்மையாகி மக்களைச் செல்வராக்கிய ஆண்டவரின் வழியால் தான் நாம் மீட்கப்பட்டு பிழைத்திருக்கிறோம் என்பதை மறக்கக் கூடாது.

குழந்தை இயேசுவாக ஊனுடல் ஏற்றார். கிறிஸ்துவாக அருட்பொழிவு செய்யப்பட்டார். தம்மையே கொடுத்து எம்மை மீட்கும் அளவுக்கு ஏழ்மையையும் வெறுமையையும் அவர் தனதாக்கினார்.

இப்பிறப்பின் நாட்களை சந்திக்க கிருபையாக இறைவன் மீண்டும் ஒரு வாய்ப்பை வழங்கியுள்ளார். எம் உள்ளங்களில் எல்லா நிலைகளிலும் நாமும் இறையரசின் விழுமியமான ஏழ்மையை எமதாக்கி மற்றவர்களை செல்வராக்கும் செயற்பாட்டை உணர்ந்தவர்களாய் பணி செய்ய இப்பிறப்பின் நாட்கள் சிந்தையிலே தெளிவையும் ஊக்கத்தையும் அளித்து மனமாற்றத்தைத் தரட்டும். அவரின் இரண்டாவது வருகையில் அவரது ஏழ்மையின் பண்புகளை மற்றவருக்கு நிறைவாக வழங்கி இறைவனின் நியாயத் தீர்ப்புக்குத் தப்பித்துக் கொள்வோம்.(மத் 25:31-46)

வருகின்ற பிறப்பின் நாட்கள் உங்கள் அனைவருக்கும் நிறை மகிழ்வைத் தரட்டும். இந்த புரிந்துணர்வின் அடிப்படையில் கிறிஸ்து பிறப்பின் நாட்களை கொண்டாடத் தயாராகி விட்டீர்களா? செல்வத்தில் திகழும் பொன் நகைகளை இழந்து அவருக்கு சேவகம் செய்ய குழந்தை இயேசு தீவனத் தொட்டியினின்று புன்னகை செய்து அழைக்கிறார்.

"ஏழையரின் உள்ளத்தோர் பேறு பெற்றோர்,
ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது. (மத் 5:3)

வண .ஈ.னொக் பூ. புனிதராஜா

# குறுக்கெழுத்துப் போட்டி – 02

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | | ■ | ■ | 3 | ■ |
| | | ■ | ■ | 4 | 5 | | |
| 6 | | 7 | | ■ | 8 | | |
| 9 | | | ■ | ■ | | | ■ |
| ■ | ■ | 10 | 11 | 12 | | ■ | 13 |
| 14 | 15 | ■ | | | ■ | 16 | |
| ■ | | ■ | 17 | | | ■ | |
| 18 | | | ■ | | ■ | 19 | |

அனுப்புபவரின் பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

..............................

## இடமிருந்து வலம்:

1. யோசுவா நாட்டை பங்கிட்டபோது இசக்கார் புத்திரருக்கு கிடைத்த ஒரு நிலப்பகுதி
4. கிதியோனின் கடைசி புதல்வர் (குழம்பியுள்ளது)
6. இயேசு கிறீஸ்து ஞானஸ்தானம் பெற்ற பகுதி
8. தோமாவின் மறுபெயர்
9. இஸ்ரவேலருக்கு வாக்களிக்கப்பட்ட நாடு (வலம் இருந்து இடமாக உள்ளது)
10. யாக்கோபுவின் புதல்வர்களில் ஒருவர் (குழம்பியுள்ளது)
14. மண் அரிப்பைக் கட்டுப்படுத்தும்
16. இயற்கைப் பசளையாக இதனைப் பயன்படுத்தலாம்
17. இஸ்ரவேலர் காலத்தில் காணப்பட்ட அந்நிய தெய்வம்
18. பேதுருவின் மறுபெயர்
19. இறுதியான சிறிய நியாயாதிபதிகளில் ஒருவர்

## மேல் இருந்து கீழ்

1. நியாயாதிபதிகளில் ஒருவர்
2. சின்ன ஆசியாவில் காணப்பட்ட ஏழு சபைகளில் ஒன்று
3. மோசேயின் மாமனார்
5. உடன்படிக்கைப் பேழை இந்த மரத்தினால் செய்யப்பட்டது (கீழிருந்து மேலாக உள்ளது)
7. எப்பிராயீமுடைய குமாரர்களில் ஒருவர்
11. பேதுரு தரிசனம் கண்ட இடம்
12. இடியுடன் இதனையும் பார்க்கலாம் (குழம்பியுள்ளது)
13. கர்த்தருடைய தூதன் கிதியோனை சந்திக்கும் படி இந்த மரத்திற்குக் கீழே அமர்ந்திருந்தார்.
15. லோத்துவின் மூத்த மகளுக்கு பிறந்த புதல்வர்

❖ குறுக்கெழுத்துப் போட்டி – 02 அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 15-01-2006

- ☞ முதலாம் இடத்திற்கு ரூ 250.00
- ☞ இரண்டாம் இடத்திற்கு ரூ 150.00
- ☞ மூன்றாம் இடத்திற்கு ரூ 100.00

**முகவரி குறுக்கெழுத்துப் போட்டி**

**இல 02 இறையியல் களஞ்சியம்**

**இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரி**

**மருதனார்மடம்,**

**சுன்னாகம்**

## குறுக்கெழுத்துப் போட்டி இல .01

சரியான விடைகள்:

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 01. சுனாமி | 01. சுழல் காற்று |
| 04. சாத்தான் | 02. மின்யமீன் |
| 07. துன்பம் | 03. பேதுரு |
| 08. யவீரு | 04. சாபம் |
| 10. தர்மம் | 05. சத்தம் |
| 12. மீக்கா | 06. தாமார் |
| 13. கிறிஸ்த்து | 09. போவாஸ் |
| 14. யோசே | 11. மனாசே |
| 16. யோர்தான் | 13. கிலேயோப்பா |
| 18. மன்னா | 14. யோவான் |
| 19. யோசியா | 17. தாவீது |
| 21. கானா | 18. மத்தேயு |
| 22. லோத்து | 19. யோனா |
| | 20. காசி |

❖ பரிசில் பெறுவோர்

1ம் பரிசு : டிலானி ஆணல்ட், குருமனை, உடுவில், சுன்னாகம்

2ம் பரிசு : வினோதினி சண்முகம், தமிழரசி நகைமாடம், பிரதான வீதி கிளிநொச்சி

## 🕮 எம் இனிய இறையியல் களஞ்சிய

## வாசகர்களே............

இந்த ஆண்டிலே இறையியல் களஞ்சியத்தின் ஊடாக பயன்பெற்றீர்கள் என்பதை நம்பி கடவுளுக்கு நன்றி செலுத்துகிறோம். இதற்கு உதவிசெய்த அனைவருக்கும், கட்டுரை தந்துதவியவர்களுக்கும், சந்தா மூலம் எம்மை தாங்கியவர்களுக்கும் எம் நன்றிகள்.

புதிய ஆண்டிற்கான சந்தாக்கட்டணம் ருபா 200.00 யை (இருநூறு) பணமாகவோ அல்லது காசுக்கட்டளையாகவோ தயவுசெய்து அனுப்பிவைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.


**அனுப்ப வேண்டிய முகவரி :**

**ஆசிரியர்,**
**இறையியல் களஞ்சியம்,**
**கிறிஸ்தவ இறையியல் கல்லூரி,**
**மருதனார்மடம், சுன்னாகம்.**

*தங்கள் முகவரியில் மாற்றம் இருப்பின் அறியத்தரவும்*
*தங்கள் ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ள ஆவலாய் இருக்கிறோம்.*

☞ 2006 மார்ச் இதழின் மகுட வாக்கியம் உயிர்ப்பும் சாட்சியும் - தங்கள் ஆக்கங்களை எதிர்பார்க்கிறோம்.

**உங்கள் அனைவருக்கும் எமது நத்தார், புதுவருட நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.**



நன்றி

நிர்வாகக்குழு

நண்பர்களே, இவ்வாண்டு மலரவுள்ள இதழ்களின் கருப்பொருட்களை இங்கு குறிப்பிட்டுள்ளோம். இவற்றை மையமாகக் கொண்டு தரமான ஆக்கங்களை உங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம்.

ஜூன் - "கடவுளின் படைப்பும் மனுக்குலப் பொறுப்பும்"

செப்ரெம்பர் - "திருச்சபை ஒன்றிப்பு ஏன்?"

டிசம்பர் - "இயேசுவின் தரித்திரம் - எமது ஐசுவரியம்"

நன்றி.

- நிர்வாகி -

## தென் அமெரிக்க பக்தி மாலை

தந்தையே,
அநீதத்திலிருந்து நீதிக்கும்
அடிமைத்தனத்திலிருந்து விடுதலைக்கும்
அழிப்பதிலிருந்து படைப்பதற்கும்
தனிமைத்துவத்திலிருந்து குழுமத்திற்கும்
பகைமையிலிருந்து அன்புறவிற்கும்
அறியாமையிலிருந்து அறிவிற்கும்
குழப்பத்திலிருந்து தெளிவிற்கும்
சார்பு நிலையிலிருந்து சார்பற்ற நிலைக்கும்
பயத்திலிருந்து நம்பிக்கைக்கும்
காயப்படுதலிருந்து குணமாவதற்கும்
தனிமனித விடுதலையிலிருந்து குழும விடுதலைக்கும்
பிரிவினைகளிலிருந்து சமத்துவத்திற்கும்
எங்களை வழிநடத்தியருளும்
எங்களோடு வழி நடந்தருளும்.

# இறையியல் களஞ்சியம்

ஆண்டு சந்தா (அஞ்சல் செலவு உட்பட) 200/=
தனிப்பிரதி 50/=

தொடர்பு கொள்க :
'இறையியல் களஞ்சியம்'
இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரி,
மருதனார்மடம்,
சுன்னாகம், யாழ்ப்பாணம்,
இலங்கை.

# IRAIIYAL KALANJIYAM

A Tamil Theological quarterly
Annual subscription (Including postage within Srilanka) Rs 200/=
Single Copy 50/=

Subscription and Correspondence to :-
Irai Iyal Kalanjiyam
Christian Theological seminary of SriLanka
Maruthanarmadam
Chunnakam, Jaffna
Srilanka.

COC Graphics - Inuvil - 2227643